بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 9

இதழ் 23

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1445 - துல்கஅதா 28★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - இஹ்ஸான் 06 ★ 06 ஜூன் 2024


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ لَہٗ مُلۡکُ السَّمٰوٰتِ وَالۡاَرۡضِ ؕ یُحۡیٖ وَیُمِیۡتُ ؕ وَمَا لَکُمۡ مِّنۡ دُوۡنِ اللّٰہِ مِنۡ وَّلِیٍّ وَّلَا نَصِیۡرٍ ﴿۱۱۶﴾

நிச்சயமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்விற்குரியதே. அவன் உயிரையும் வழங்குகின்றான்; மரணத்தையும் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ்வைத் தவிர உங்களுக்கு நண்பரோ உதவி செய்பவரோ வேறெவரும் இல்லை.(9:116)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**மஹ்தி வந்த உடனேயே போர் புரிவார்; மேலும் இறைவனுடைய படைப்பினங்களின் இரத்தத்தால் பூமியை வண்ணமயமாக்கி விடுவார் என்று அவரை குறித்து ஹதீஸ்களில் உள்ளது. இது போன்ற ஹதீஸ்களை உருவாக்கியவர்கள் அநீதியிழைப்பதற்கு எந்த அளவிற்கு தாகம் கொண்டவர்களாகவும் இறைவனின் படைப்பினத்தின் உயிரைப் பறிப்பதற்கு எந்த அளவிற்கு பசியுடையவர்களாகவும் இருந்தனர் என்பதை இறைவனே அறிவான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இன்று நான் கன்ஸுல் உம்மால் (என்ற ஹதீஸ் நூலை) பார்த்துக் கொண்டிருந்தேன். மஹ்தி மற்றும் தஜ்ஜாலைக் குறித்து 85 ஹதீஸ்கள் அதில் ஒன்று திரட்டப்பட்டுள்ளன. அவை அனைத்திலும் இவ்வாறே உள்ளது. அதாவது அவர் வந்த உடனேயே போர் புரிவார்; மேலும் இறைவனுடைய படைப்பினங்களின் இரத்தத்தால் பூமியை வண்ணமயமாக்கி விடுவார்; இது போன்ற ஹதீஸ்களை உருவாக்கியவர்கள் அநீதியிழைப்பதற்கு எந்த அளவிற்கு தாகம் கொண்டவர்களாகவும், இறைவனின் படைப்பினத்தின் உயிரைப் பறிப்பதற்கு எந்த அளவிற்கு பசியுடையவர்களாகவும் இருந்தனர் என்பதை இறைவனே அறிவான். இக்காலத்தில் அறிவுகள் எந்த அளவிற்கு வீணாகிவிட்டன! இறைவன் புறமிருந்து தோன்றும் ஒருவர் வந்த உடனேயே எந்த சான்றுகளையும் நிறைவு செய்யாமல் வாள் வீச்சை துவங்கி விடுவது என்பது தப்லீஃக்கிற்கான விதிமுறைகளுக்கும், நபித்துவத்திற்கும் முற்றிலும் எதிரானதாகும் என்ற விஷயம் அவர்களுக்கு புரியவே இல்லை. ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால் ஒரு பக்கம் இறுதிக் காலத்தை ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து மிகவும் விலகிய காலமாக அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். மேலும், காலம் நபித்துவ காலத்திலிருந்து எவ்வளவு தொலைவில் இருக்குமோ அதே அளவில் கவனக்குறைவும், சோம்பலும் அல்லாஹ்விடமிருந்து முகம் திருப்பி விடுகின்ற நோயும் கடுமையாக இருக்கும் என்பது வெளிப்படையாகும். இது மட்டுமின்றி, இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதியையும் இறைவன் புறமிருந்து தோன்றக் கூடியவரையும் அவர்கள் எப்படிப்பட்ட நபராக ஆக்கி வைத்துள்ளனர் என்றால் அவர் வந்த உடனேயே வாளை பயன்படுத்துவார்; மேலும் சான்றுகளை முழுமை செய்யக் கூடிய ஒரு சொல்லைக் கூட கூற மாட்டார். இத்தகைய நபர் சீர்திருத்தவாதியாக எப்படி இருப்பார்; அவரோ இரத்தம் சிந்தச் செய்யும் குழப்பவாதியாக ஆகிவிடுகின்றார்.

கூறினார்கள்: இந்த ஹதீஸ்களை படித்து விட்டு உடல் நடுங்கி விட்டது; மேலும் தற்போது இறைவன் கருத்தில் கொள்ளாமல் இருந்திருந்தால் பின்னர் இந்த ஜமாஅத்தை அவன் நிறுவியிருக்க மாட்டான் என்ற வேதனை மிகுந்த உணர்வுடன் கடந்தேன். அந்த இறைவன் தான் உண்மையான நிலையின் தகவலை தெரிவிப்பதற்கான பொறுப்பை ஏற்றுள்ளான். ஆக, இந்த ஹதீஸ்களின் தொகுப்புகள் சிறிது காலத்திற்கு பிறகு எண்ணற்ற நபர்களை மார்க்கமற்றவர்களாக

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

**கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் அல்லாஹ்வின் நாமத்தை பரப்புவதற்காக தங்களது உணர்வுகளை மிக அதிகமாக தியாகம் செய்தனர். எதுவரை என்றால் அவர்களில் ஒவ்வொருவரும் உயிருள்ள இப்ராஹீமாக ஆகிவிட்டனர். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலால் அன்னாரின் ஆன்மிக சந்ததிகளில் ஆயிரக்கணக்கான இப்ராஹீம்கள் பிறந்தனர். இப்ராஹீம் (அலை) அவர்கள் முன் வைத்த அதே காட்சியை அவர்கள் உலகிற்கு முன்னால் வைத்து விட்டனர்**

وَاِذۡ بَوَّاۡنَا لِاِبۡرٰہِیۡمَ مَکَانَ الۡبَیۡتِ اَنۡ لَّا تُشۡرِکۡ بِیۡ شَیۡئًا وَّطَہِّرۡ بَیۡتِیَ لِلطَّآئِفِیۡنَ وَالۡقَآئِمِیۡنَ وَالرُّکَّعِ السُّجُوۡدِ ﴿۲۷﴾ (22:27)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:அந்த மக்களிடத்தில் சீர்கேடுகள் தோன்றின என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த மக்களை தூய்மைப்படுத்திய போது, அவர்களில் இருந்தே அபூபக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி) மற்றும் அலீ (ரலி) ஆகியோர் தோன்றினர். இன்னும் கூறப்போனால், (அது போன்ற) இன்னும் ஆயிரக்கணக்கான நபர்கள் தோன்றினர். அவர்களில் தல்ஹா (ரலி) போன்ற நபர்களும் தோன்றினர். அவர்களில் ஸுபைர் (ரலி) போன்ற நபர்களும் தோன்றினர். அவர்களில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) போன்ற நபர்களும் தோன்றினர். அவர்களில் அபூஉபைதா (ரலி) போன்ற நபர்களும் தோன்றினர். அவர்களில் உஸ்மான் பின் மழ்ஊன் (ரலி) போன்ற நபர்களும் தோன்றினர். இவர்கள் எத்தகைய மக்களாக இருந்தனர் என்றால், அல்லாஹ்வின் நாமத்தை பரப்புவதற்காக தங்களது உணர்வுகளை உச்சபட்சமாக தியாகம் செய்தனர். எந்த அளவுக்கு என்றால் அவர்களில் ஒவ்வொருவரும் உயிருள்ள இப்ராஹீமாக ஆகிவிட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சந்ததிகளைச் சேர்ந்தவராக இருந்தார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், அன்னார் (ஸல்) அபூ இப்ராஹீமாகவும் இருந்தார்கள் என்பதிலும் எவ்வித ஐயமும் இல்லை. மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலால் அன்னாரின் ஆன்மிக சந்ததிகளில்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

## நபிமொழி

**பரீராஃவிற்கு ஸதகா எமக்கு அன்பளிப்பு**

(2576) ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இறைச்சி கொண்டு வரப்பட்டது. மேலும், பரீராஃ (ரலி) அவர்களுக்கு ஸதகா கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள். அதற்கு, இது அவருக்கு ஸதகா ஆகும்.; எமக்கோ இது அன்பளிப்பாகும் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரீ, தொகுதி 4, கிதாபுல் ஹிபா)

விளக்கம்: ஹஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஸஹாபா பெருமக்களின் நடைமுறையிலிருந்து இந்த விஷயம் வெளிப்படுகின்றது. அதாவது அவர்களுக்கு மத்தியில் அனைத்து உறவுகளும் சகோதரத்துவம் மற்றும் சமத்துவத்திற்கான சரடில் பிணைக்கப்பட்டிருந்தன. மேலும் ஒருவர் மற்றவரிடம் வெளிப்படையாக இருந்தனர். இனம், நிறம், வம்சம், தேசம், தொழில், மற்றும் சமுதாயம் என்ற பாகுபாடுகள் அவர்களுக்கு மத்தியில் இருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட ஹதீஸின் பாடத்தின் ஆறு அறிவிப்புகளிலிருந்து இஸ்லாமிய சமத்துவத்தின் தன்மைகள் முற்றிலும் வெளிப்படுகின்றன. மேலும் அதன் நல்ல தாக்கம் இஸ்லாமிய சமூகத்தில் தற்போது வரை எஞ்சியிருக்கின்றது. முஸ்லிம்களின் வசிப்பிடம் அந்நிய நாடுகளில் இருந்தாலோ அல்லது அவர்கள் தங்களது சொந்த நாட்டிலேயே இருந்தாலும் சரி; கால மாற்றங்களால் நிகழ்ந்த மாற்றமும், சமுதாயங்களின் நாகரீகத்தின் தாக்கமும் இருந்தபோதிலும் இஸ்லாமிய போதனையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் நல்ல தாக்கமும் அவர்களிடம் இன்று வரை குறைந்தபட்ச அளவிலாவது இஸ்லாமிய சமூகத்தில் காணப்படுகின்றது.

* * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹது போரின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய அருளுக்குரிய வாழ்க்கை மற்றும் ஸஹாபா பெருமக்கள் அன்னார் (ஸல்) மீது கொண்டிருந்த அன்பு நேசம் மற்றும் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்புகள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இப்னு கத்தாபே! குறைஷியர்கள் இனி ஒருபோதும் நம்முடன் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டார்கள்; எதுவரை என்றால் நாம் அஸ்வத் கல்லிற்கு முத்தமிடுவோம்**

**உலகின் நிலைமைக்காக துஆவிற்கான அறிவிப்பு**

**அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் எல்லா வகையான தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக**
**ஆஸ்திரேலியாவில் தனது கடமையை நிறைவேற்றியவாறு ஷஹாதத் பானத்தை அருந்திய ஃபராஸ் அஹ்மத் தாஹிர் ஸாஹிப் அவர்களின் ஷஹாதத்தைப் பற்றிய நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும்**

**அவர் பாகிஸ்தானிலிருந்து மரணத்திற்கு அஞ்சி வெளியேறவில்லை ; மாறாக அஹ்மதிகள் மீது விதிக்கப்படும் மார்க்க கட்டுப்பாடுகளின் தொல்லைகளுக்கு ஆளாகியதாலும் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பெயரைக் கூறுவதிலிருந்து அங்கு தடுக்கப்பட்டதாலும் அவர் நாட்டை விட்டு வெளியேறினார் என்பதை அவருடைய இந்த தியாகம் வெளிப்படுத்துகின்றது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 ஏப்ரல் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **ஷஹாதத்** மாதம் **26 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹம்ரா அல்அஸத் போருக்கான காரணம் மற்றும் அதன் பின்னணி தொடர்பாக கடந்த குத்பாவில் கூறிவந்தேன். எவ்வாறு இருப்பினும், உஹது போருக்கு பிறகு எதிரிகள் வழியில் இருந்து திரும்பி மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான திட்டங்கள் வகுக்கின்றார்கள் என்ற செய்தி கிடைத்த உடன் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரை அழைத்தார்கள். அவர்கள் இருவரும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எதிரிகளின் பக்கம் செல்ல வேண்டும்; ஏனெனில், அவர்கள் நம்முடைய குழந்தைகள் மீது தாக்குதல் தொடுத்து விடக் கூடாது. சுபுஹ் தொழுகை தொழுது முடித்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களை அழைத்து வரும்படி கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் இவ்வாறு அறிவிப்பு செய்யுங்கள் என்று கூறினார்கள்: அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதிரிகளுக்கு எதிராக புறப்படுவதற்கு உங்களுக்கு கட்டளை பிறப்பிக்கின்றார்கள்; மேலும் கடந்த நாளில் நடந்த போரில் எவர்கள் எல்லாம் நம்முடன் கலந்து கொண்டார்களோ அவர்களே புறப்பட வேண்டும்; அதாவது உஹது போரில் கலந்து கொண்ட நபர்கள் மட்டுமே உடன் செல்வார்கள்.

இஸ்லாமியக் கொடி மற்றும் மதீனாவிற்கு பொறுப்பாளர்களை நியமித்தது தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய கொடியை கொண்டு வரச் செய்தார்கள். அது முந்தைய நாளன்றே கட்டி வைக்கப்பட்டு இருந்தது. அது அப்பொழுது வரை இறக்கப்படாமல் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தக் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள் என்று மற்றோர் இடத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த தருணத்தில் ஹஸ்ரத் இப்னே உம்மே மக்தூம் (ரலி) அவர்களை பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் தமது பிரதிநிதியாக நியமித்தார்கள்.

வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எதிரிகளை பின் தொடர்ந்து புறப்பட்டது என்பது மிகவும் ஞானம் மிக்க தீர்மானம் ஆகும். விரிவாக எழுதப்பட்டுள்ளது: உஹது போரில் எழுபது நபர்களுடைய உயிர் அர்ப்பணம் ஆகியிருந்தது; அதற்கு அடுத்த நாளே எதிரிகளை பின்தொடர்ந்தவாறு அதிகப்படியான நபர்களின் ஒத்துழைப்பு இன்றி செல்வது ஆபத்திற்குரியது ஆகும் என்பது நயவஞ்சகர்களின் பார்வையாக இருந்தது. ஆனால், பிற்காலத்தின் சூழல்கள் நிரூபிப்பது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் தீர்மானம் மிகவும் அறிவுத் திறன் கொண்டதாக இருந்தது. இதனால் முஸ்லிம்களுக்கு எண்ணிடலங்கா பயன்கள் கிடைத்தன. பெருமானார் (ஸல்) அவர்களுடைய முழு இரவும் போரினால் ஏற்பட்ட சூழ்நிலையை சிந்தித்தவாறு கழிந்தது. உஹதில் இருந்து திரும்பிச் சென்ற இணைவைப்பாளர்களுக்கு தங்களுடைய சிந்தனையில் போர் நமக்கு சாதகமாக இருந்தபோதிலும் நாம் எந்த பயனும் அடையவில்லை என்ற எண்ணம் இருந்தது. நிச்சயமாக அவர்கள் இழிவை உணர்ந்தனர். எனவே அவர்கள் திரும்பி வந்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கக் கூடும் என்ற ஆபத்தை அன்னார் (ஸல்) உணர்ந்தார்கள். எனவே போரின் மிகச் சிறந்த நுட்பமான ஞானத்துடன் செயல்பட்டவாறு எதிரிகளை பின்தொடர்ந்து செல்ல வேண்டும் என்று அன்னார் (ஸல்) முடிவெடுத்தார்கள். இந்த தீர்மானம் ஜிஹாது செய்பவர்களுடைய தன்னம்பிக்கையை மேலும் முன்னேற்றத்தின் பக்கம் கொண்டு சென்றது. மேலும் நயவஞ்சகர்களுடைய உள்ளத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் உறுதியான எண்ணம் மற்றும் திட உறுதி தொடர்பாக அச்சத்தை ஏற்படுத்தியது. இஸ்லாமியப் படை தங்களை பின்தொடர்ந்து வருகின்றது என்ற செய்தி எதிரிகளுக்கு கிடைத்தது. இதனால் அவர்களின் தன்னம்பிக்கையின் கொழுந்து விட்டு எரிந்த நெருப்பு அணைய தொடங்கியது. இது ஒரு வரலாற்று நூலின் குறிப்பாகும்.

நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் அபீ, தானும் உடன் செல்வதற்கான அனுமதி கோரினான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று இந்தப் போரில் கலந்து கொள்ள விண்ணப்பம் செய்தான். ஆனால், உஹது போரில் அவன் திரும்பிச் சென்றது மட்டுமல்லாமல் தன்னுடன் 300 நபர்களையும் அழைத்துக் கொண்டு திரும்பி சென்றான். இவ்வாறான செயலினால் நிச்சயமாக அவன் வெட்கப்பட்டு இருக்கலாம். அந்த இழிவின் கறையை அகற்றவோ அல்லது வேறு ஏதாவது சதித் திட்டத்தினாலோ அவன் அவ்வாறு செய்தானா? என்பதை அல்லாஹ்வே அறிவான்! ஏனெனில், இணை வைப்பாளர்களின் நிலையை குறித்து ஒன்றும் கூற இயலாது. அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானான். மேலும், பெருமானார் (ஸல்) அவர்களுடன் செல்வதற்கு அனுமதி கோரினான். ஆனால், அன்னார் (ஸல்) அவனுக்கு அனுமதி வழங்கவில்லை ; வேண்டாம்! என்று அன்னார் (ஸல்) கூறிவிட்டார்கள்.

உஹது போரில் காயமுற்ற

ஸஹாபிகளுக்கு மிக அதிகம் காயம் ஏற்பட்டிருந்தது. சிலருடைய நிலை எவ்வாறு இருந்தது? மேலும் பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு கட்டுப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் எவ்வாறான முன்மாதிரியை காண்பித்தார்கள்? என்பதைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

பெருமானார் (ஸல்) அவர்களுடைய அறிவிப்பு வந்ததும் நேசம் மற்றும் பற்றுகொண்ட அந்த களங்கமற்ற அர்ப்பணிப்பாளர்கள் தங்களுடைய காயங்களை பராமரித்தவாறு தங்களுடைய ஆயுதங்களை ஏந்தியவாறு மீண்டும் ஒருமுறை புறப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த அறிவிப்பை செய்தபோது அவர்கள் உடனடியாக புறப்பட்டு விட்டார்கள்.ஹஸ்ரத் உஸைத் பின் குஸைர் (ரலி) அவர்களுக்கு ஒன்பது காயங்கள் ஏற்பட்டிருநதன. அவர்கள் மருந்து தடவ வேண்டும் என்று எண்ணம் கொண்டபோதுதான் அவர்களுடைய காதுகளில், உங்களுடைய காயங்களில் மருந்து போடுவதற்கு கூட நிற்காதீர்கள்! புறப்படுங்கள் என்ற சத்தம் விழுந்தது.

பனூ ஸலமாவில் இருந்து காயமுற்றிருந்த 40 நபர்கள் புறப்பட்டனர். இவ்வாறான சூழலிலும் பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைக்குக் கட்டுப்பட்டவாறு புறப்பட்டதை பார்த்து அவர்களுக்காக பாவமன்னிப்பிற்கான துஆவை செய்தார்கள்.

மேலும் கூறினார்கள்;

اَللّٰهُمَّ ارْحَمْ بَنِي سَلَمَه

அல்லாஹ்வே! பனூ ஸலமா மீது கருணை காட்டுவாயாக!

துஃபைல் பின் நுஃமா (ரலி) அவர்களுக்கு 13 காயங்கள் ஏற்பட்டிருந்தன.கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களுக்கு பத்திற்கும் மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டிருந்தன. மேலும்,குத்பா பின் ஆமிர் (ரலி) அவர்களுக்கு 9 காயங்கள் ஏற்பட்டிருந்தன. இருப்பினும், இவை அனைத்திற்கும் பிறகும் கூட முஸ்லிம்கள் தங்களுடைய ஆயுதங்களின் பக்கம் ஓடினார்கள். மேலும் தங்களுடைய காயங்களுக்கு மருந்து போடுவதற்காக நிற்கவில்லை.ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் இந்த நிகரற்ற ஆர்வத்தை இறைவன் தன்னுடைய வேதத்தில் பதிவு செய்து உலகம் இருக்கும் நாள் வரை இவர்களுடைய இந்த கொள்கையின் மீது பூமழை பொழிந்து கொண்டே இருக்கச் செய்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

اَلَّذِيْنَ اسْتَجَابُوْا لِلّٰهِ وَالرَّسُوْلِ
مِنْۢ بَعْدِ مَآ اَصَابَهُمُ الْقَرْحُ ۛ
لِلَّذِيْنَ اَحْسَنُوْا مِنْهُمْ وَاتَّقَوْا
اَجْرٌ عَظِيْمٌ

பொருள்:தங்களுக்கு காயம் ஏற்பட்டதன் பிறகு (ம்) அல்லாஹ்வினுடையதும், தூதருடையதுமான கட்டளையினை ஏற்றுக் கொண்டவர்களுள் தங்கள் கடமையினை நன்முறையில் நிறைவேற்றியவர்களுக்கும் இறையச்சத்தை மேற்கொண்டவர்களுக்கும் பெரும் கூலி உண்டு.( திருக்குர்ஆன் 3: 173)


ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) ஆகியோர் இதற்கு ஓர் உதாரணம் ஆவார்கள். ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் உடன் செல்வதற்கு அனுமதி கோரியது தொடர்பாக கிடைக்கின்ற விவரம் இதுவாகும்: அதாவது உஹது போரில் கலந்து கொண்டவர்கள் மட்டுமே இந்த போரில் உடன் செல்வார்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் புறமிருந்து அறிவிப்பு செய்யப்பட்டது. இதன் மீது உறுதியாக அமல் செய்யப்பட்டது. ஆனால் ஒரு நற்பேறு பெற்ற பற்றுள்ள ஸஹாபி எவ்வாறானவராக இருக்கின்றார் என்றால், அவர் உஹது போரில் பங்கு பெறவில்லை ; ஆனால் உடன் செல்வதற்கு அவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. மேலும் அவர் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் ஆவார்கள். இப்னு இஸ்ஹாக் மற்றும் இப்னு உமர் ஆகியோர் அறிவிக்கின்றார்கள்: அதாவது ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ்(ரலி) பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும் விண்ணப்பமும் வைத்தார்கள். அதாவது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களுடன் கடந்த நாட்களில் போரில் கலந்து கொண்டவர்கள் மட்டுமே புறப்படுவார்கள் என்று தங்களுடைய அறிவிப்பாளர் அறிவிப்பு செய்துள்ளார். உஹது போரில் கலந்து கொண்டவர்கள் மட்டுமே கலந்து கொள்வர்.

எனக்கு போரில் பங்கு பெறுவதற்கான ஆசை இருந்தது. ஆனால், என்னுடைய ஏழு சகோதரிகளை பார்த்துக் கொள்வதற்காக என்னுடைய தந்தை விட்டுச் சென்றார்கள். மேலும் ஒரு கூற்றின் அடிப்படையில் அன்னாருடைய சகோதரிகளின் எண்ணிக்கை ஒன்பதாகும்.

எவ்வாறு இருப்பினும், கூறப்படுகிறது: (அப்போது) என்னுடைய தந்தை கூறினார்:

என் மகனே! இந்தப் பெண்களை எந்த ஆணும் இல்லாமல் விட்டு செல்வது நம் இருவருக்கும் நல்லதல்ல; இவர்கள் பலவீனமான பெண்கள் என்ற அச்சம் எனக்கு இருக்கின்றது; மேலும் நான் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஜிஹாது செய்ய செல்வதில் என்னை விட உனக்கு முன்னுரிமை வழங்க முடியாது. மேலும் இந்தப் பெண்களை பின்னால் தனியாக விட்டு செல்லவும் முடியாது;மேலும் நான் பங்கு பெறவும் விரும்புகிறேன்; நான் செல்ல வேண்டும் என்பது எனது விருப்பம் ஆகும்; நீங்கள் செல்ல வேண்டாம். எனவே நீங்கள் உங்களுடைய சகோதரிகளுடன் பின்னால் தங்கி விடுங்கள். மேலும் நான் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஜிஹாதிற்காக செல்கிறேன்.

கூறுகின்றார்கள்: இதனால் நான் என்னுடைய தந்தையின் இந்தக் கட்டளையின்படி நேற்று போரில் கலந்து கொள்ளவில்லை. போரில் கலந்து கொள்ள வேண்டும் என்பதே எனது முழு எண்ணமாக இருந்தது. எனவே ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் அன்பு மற்றும் நேசத்தில் மூழ்கிய இந்த பேச்சுகளை கேட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு உடன் செல்வதற்கான அனுமதி வழங்கினார்கள். மேலும் இதனை ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் பெருமிதத்துடன் கூறிவந்தார்கள். அதாவது என்னைத் தவிர கடந்த நாட்களில் நடந்த ஜிஹாதில் பங்கு பெறாத எந்த நபரும் தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் செல்லவில்லை. அன்னாரிடம் பல நபர்கள் அனுமதி வேண்டினார்கள். அவர்கள் கடந்த நாட்களில் ஜிஹாதில் பங்கு பெற்றிருக்கவில்லை. எனவே அன்னார் (ஸல்) அவர்களை நிராகரித்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வாறான சூழலில் புறப்பட்டார்கள் என்றால், முகத்தில் காயம் இருந்தது. நெற்றியில் காயம் ஏற்பட்டு இருந்தது. அருளுக்குரிய பற்கள் உடைந்து இருந்தன. கீழ் உதடு; சில அறிவிப்பின் அடிப்படையில் இரண்டு உதடுகளும் உட்புறமாக காயப்பட்டிருந்தன. வலது தோளில் இப்னு கமீயாவின் வாளினால் காயம் ஏற்பட்டிருந்தது. இரண்டு கால் முட்டியிலும் காயம் ஏற்பட்டிருந்தது.




பெருமானார் (ஸல்) அவர்கள் முதலில் பள்ளிவாசலுக்கு சென்றார்கள். அங்கு இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். மக்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய ஸகப் எனும் குதிரையை பள்ளிவாசலின் கதவருகே கொண்டு வரச் செய்தார்கள். இந்த போரில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் மட்டுமே குதிரை இருந்தது. புறப்படும்போது அன்னார் (ஸல்) முழுமையான தலைகவசம் அணிந்திருந்தார்கள். மேலும் அன்னாருடைய கண்கள் மட்டும்தான் தெரிந்தன. இந்த தருணத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். தல்ஹாவே! உம்முடைய ஆயுதங்கள் எங்கே? என்று அவரிடம் அன்னார் (ஸல்) கேட்டார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அருகில்தான் இருக்கின்றன என்று கூறியவாறு விரைவாக சென்று தம்முடைய ஆயுதத்தை அன்னார் (ரலி) எடுத்து வந்தார்கள். இருப்பினும் அந்த தருணத்தில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களுடைய நெஞ்சில் மட்டும் உஹது போரில் ஏற்பட்ட 9 காயங்கள் இருந்தன. அன்னாருடைய உடலில் மொத்தம் எழுபதிற்கும் அதிகமான காயங்கள் இருந்தன.

ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் என்னுடைய காயத்தை விட பெருமானார் (ஸல்) அவர்களின் காயம் குறித்தே அதிக கவலை கொண்டிருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கு அருகில் வந்தார்கள். மேலும், நீங்கள் எதிரியை எங்கு காண்கின்றீர்கள்? என்று வினவினார்கள்.

அதாவது உங்களுடைய கணிப்பு என்ன? அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய படை எந்த இடத்தில் இருக்கின்றது? என்று வினவினார்கள்.நஃஷீப் பகுதியில் என்று நான் கூறினேன். என்னுடைய கருத்தும் அதுவே ஆகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: அவர்களைப் பொருத்தவரை அதாவது குறைஷிகளை பொருத்தவரை, இனி அவர்களுக்கு நம்முடன் இவ்வாறான செயல்கள் செய்வதற்கான வாய்ப்பு கிடைக்காது. எதுவரை என்றால்,அல்லாஹ் மக்காவை நமது கரங்களால் வெற்றி அடையச் செய்வான். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் ( ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இப்னு கத்தாபே! இனி, குறைஷிகள் நம்முடன் இவ்வாறு ஒருபோதும்

செய்ய முடியாது; எதுவரை என்றால் நாம் ஹஜர் அஸ்வதை முத்தமிடுவோம்.

ஹஸ்ரத் ஸாபித் பின் ஸாலபா கஸ்ரஜி (ரலி) அவர்கள் ஹம்ராஉல் அஸத் வரை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வழிப் பாதையை காட்டிக் கொடுக்கின்ற நபராக இருந்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஸாபித் பின் ஸஹாக் வழிகாட்டியாக இருந்தார். இரண்டு அறிவிப்புகள் உள்ளன. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் இரண்டு ஸஹாபிகளை முன்னே சென்று செய்தி அறிந்து வருமாறு கூறினார்கள். இது தொடர்பான விளக்கம் இவ்வாறு உள்ளது;

அதாவது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அஸ்லம் கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ ஸஹ்மில் அபூஸுஃப்யானின் இரண்டு மகன்கள் ஸலீத் மற்றும் நுஃமானை மக்களுடைய செய்தியை அறிந்து வருமாறு அனுப்பி வைத்தார்கள். மேலும் மூன்றாவது நபராக அஸ்லம் கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ அவிரில் இருந்து அவர்களுடைய தோழரை அனுப்பி வைத்தார்கள். அவருடைய பெயர் இங்கு கூறப்படவில்லை. அவர்களில் இருவர் ஹம்ராஅல் அஸத் என்ற இடத்தில் குரேஷிகளை சந்தித்தனர். குரேஷிகள் பேசிக் கொண்டிருந்தார்கள். குறைஷிகள் அந்த இருவரையும் பார்த்து விட்டார்கள். எனவே அவர்களை கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களுடைய ஸஹாபிகளுடன் புறப்பட்டார்கள். மேலும் ஹம்ராஅல் அஸத் என்ற இடத்தை சென்றடைந்து, படையை அங்கு நிறுத்தினார்கள். அப்பொழுது இந்த இரண்டு ஸஹாபிகளின் உடலை ஒரே கபரில் அடக்கம் செய்தார்கள். அந்த இரண்டு தோழர்களுடைய உடல் அங்கேயே இருந்தது.

இந்தப் போரில் இரண்டு அன்ஸார் சகோதரர்களின் கட்டுப்படுதலின் முன்மாதிரி கிடைக்கின்றது. அதாவது அவர்கள் எவ்வாறு காயமுற்ற நிலையில் நடந்து பயணம் மேற்கொண்டார்கள்? என்ற விவரம் கிடைக்கின்றது. விளக்கங்களில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸஹல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ராஃபி பின் ஸஹல் (ரலி) ; இவர்கள் இருவரும் சகோதரர்கள் ஆவர். பனூ அப்துல் அஷ்அல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். உஹது போரில் இருந்து திரும்பி வரும்பொழுது இவர்கள் இருவரும் மிகவும் காயமுற்று இருந்தனர். போரில் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அதிகம் காயமுற்றிருந்தார்கள். இந்த இரண்டு சகோதரர்களும் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஹம்ரா அல் அஸத் பக்கம் செல்வது மற்றும் அதில் கலந்து கொள்வது தொடர்பாக அன்னார் (ஸல்) வழங்கிய கட்டளைகளைக் குறித்து செவிமடுத்தார்கள். எனவே அவர்களில் ஒருவர் மற்றவரிடம் கூறினார்: இறைவன் மீது ஆணையாக! நாம் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் போரில் கலந்து கொள்ளவில்லை என்றால் அது மிகப் பெரிய இழப்பாகி விடும்.

இதுதான் அவர்களுடைய ஈமானாகும். பிறகு கூறினார்; இறைவன் மீது ஆணையாக! நாம் சவாரி செய்து கொண்டு செல்வதற்கு நம்மிடம் எந்த சவாரியும் இல்லை ; மேலும் இந்தப் பணியை எவ்வாறு செய்ய வேண்டும்? என்பதும் நமக்கு தெரியவில்லை. ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: வாருங்கள்; நாம் நடந்து செல்லலாம்; ஹஸ்ரத் ராஃபி (ரலி) கூறினார்கள்; இறைவன் மீது ஆணையாக, காயத்தின் காரணமாக எனக்கு நடப்பதற்கு கூட ஆற்றல் இல்லை. இதுதான் அவர்களுடைய நிலையாகும். வாருங்கள்; நாம் மெதுவாக நடக்கலாம்; மேலும் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பக்கம் செல்லலாம் என்று அன்னாருடைய சகோதரர் கூறினார். எனவே அவர்கள் இருவரும் விழுந்தும், எழுந்தும் நடக்க ஆரம்பித்தனார். ஹஸ்ரத் ராஃபி (ரலி) அவர்கள் பலவீனத்தை உணர்ந்தபோதெல்லாம் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ராஃபி (ரலி) அவர்களை தம்முடைய முதுகில் சுமந்து கொள்வார்கள். சிலநேரங்களில் அவர் நடந்தும் செல்வார். இவர்கள் இருவரும் காயமுற்று இருந்தனர். இருப்பினும் எவர் நன்றாக இருந்தாரோ அவர் அதிகம் காயமுற்றிருந்தவரை தன் முதுகில் சுமந்து கொண்டார். எவ்வாறு இருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி அவர்கள் நடக்க ஆரம்பித்தனர். பலவீனத்தின் காரணத்தினால் சிலநேரங்களில் அசைய கூட முடியாத நிலை ஏற்பட்டது. எந்த அளவிற்கு என்றால் இஷா தொழுகை நேரத்தில் அவர்கள் இருவரும் பெருமானார் (ஸல்) அவர்களின் சபையில் ஆஜரானார்கள். ஸஹாபிகள் அந்த நேரத்தில் நெருப்பு மூட்டிக் கொண்டிருந்தார்கள். அதாவது அப்பொழுது கூடாரங்களை அமைத்து விட்டார்கள். அவர்கள் இருவரும் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். அந்த இரவு பெருமானார் (ஸல்) அவர்களின் பாதுகாப்புப் பணியில் ஹஸ்ரத் இபாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் அங்கு வந்து சேர்ந்த உடன் அவர்களிடம், எந்த விஷயம் உங்களை தடுத்து வைத்திருந்தது என்று பெருமானார் (ஸல்) கேட்டார்கள். அந்த இருவரும் அந்தக் காரணத்தை கூறினார்கள். என்ன காரணம் ஏற்பட்டது? என்பது குறித்த விவரங்களை அவர்கள் கூறினர். அதன் மீது பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இருவருக்காகவும் நன்மையை வேண்டி துஆ செய்தார்கள்.

கூறினார்கள்: ஒருவேளை உங்களுக்கு நீண்ட ஆயுள் கிடைத்தது என்றால், உங்களுக்கு குதிரை மற்றும் கோவேரி கழுதை மேலும் ஒட்டகம் சவாரியாக கிடைப்பதை பார்ப்பீர்கள்; இப்பொழுது நீங்கள் விழுந்து எழுந்தும், நடந்தும் வந்துள்ளீர்கள். ஆனால் நீண்ட ஆயுளை அடைந்தீர்கள் என்றால், இந்த அனைத்தையும் நீங்கள் பார்ப்பீர்கள். இந்த அனைத்து சவாரிகளும் உங்களுக்கு கிடைக்கும். ஆனால், அது உங்களுக்கு உங்கள் இருவரின் இந்த பயணத்தை விட சிறந்ததாக இருக்காது.இப்பொழுது நீங்கள் விழுந்து, எழுந்து நடந்து செய்து வந்துள்ள இந்தப் பயணம்; அதாவது உங்களுடைய இந்தப் பயணத்தின் நற்கூலி எந்த அளவிற்கு கிடைக்கும் என்றால் அந்த காலத்தினுடைய சிறந்த அருட்கொடைகளை விட அதிகமானதாக இருக்கும். மேலும் வருகின்றது: அதாவது இந்த சம்பவம் ஹஸ்ரத் அனஸ் (ரலி) மற்றும் மூனிஸ் மற்றும் ஃபஸாலாவின் மகன்களுடன் நடந்ததாகும். இந்த சம்பவம் இரண்டு பேர்களுடன் நடந்திருக்கலாம்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

பிறகு முஸ்லிம்களுடைய பயணப் பொருள் தொடர்பாகவும் ஹஸ்ரத் ஸஃது பின் உபாதா (ரலி) அவர்களின் வள்ளல் தன்மை தொடர்பாக குறிப்பு வருகின்றது. இதன் விவரம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதாவது ஹம்ராஅல் அஸத் போரின்போது எங்களுடைய பொதுவான பயணப் பொருட்கள் பேரீத்தம் பழமாக இருந்தது. பேரீத்தம் பழத்தையே உண்டு வந்தோம். ஹஸ்ரத் ஸாபித் பின் உபாதா (ரலி) அவர்கள் 30 ஒட்டகங்கள் மற்றும் பேரீத்தம் பழங்களைக் கொண்டு வந்தார்கள்.அது ஹம்ராஉல் அஸத் இடம் வரை எங்களுக்கு போதுமானதாக இருந்தது.

அறிவிப்பாளர் எழுதியிருந்தார்: அன்னார் (ஸல்) ஒட்டகத்தை அழைத்து வருவார்கள். ஒருநாள் இரண்டு அல்லது மற்றொரு நாள் மூன்று என அறுப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் ஒட்டகங்களும் உண்ணப்பட்டிருந்தன. பேரீத்தம் பழங்களுடன் ஒட்டகத்தின் இறைச்சியையும் உண்டனர்.

போர் குறித்து அன்னாருடைய நுட்பமான ஞானம் என்னவாக இருந்தது? போரில் அன்னார் என்ன Strategy- ஐ கையாண்டார்கள்? மேலும் எதிரிகளை எவ்வாறு வீழ்த்த விரும்பினார்கள்? இது குறித்த விவரங்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது எதிரிகளின் உள்ளங்களில் திகிலை உருவாக்கி அவர்களை பீதியில் ஆழ்த்துவதற்காக பயன்படுத்திய ஒரு வழிமுறை இதுவாக இருந்தது. அதாவது இரவு நேரத்தில் அதிகமான நெருப்பை மூட்டி வெளிச்சத்தை உருவாக்கியிருந்தார்கள். இதனால் படை மிகப் பெரியதாக தென்பட வேண்டும்; மேலும், எதிரிகள் அச்சமடைந்து விட வேண்டும் என்பதற்காக அன்னார் (ஸல்) அவ்வாறு செய்தார்கள். எனவே பெருமானார் (ஸல்) எங்கெல்லாம் இரவில் தங்கி வந்தார்களோ அங்கு ஸஹாபிகளுக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள். அதாவது பிரிந்து தனித்தனியாக நெருப்பு மூட்டுங்கள் என்று வழிகாட்டல் வழங்கினார்கள். இந்த அடிப்படையில் ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு நெருப்பை மூட்டினார்கள். 500 இடங்களில் நெருப்பு மூட்டப்பட்டது. எந்த அளவிற்கு என்றால், அது தூரத்தில் இருந்தும் தென்பட்டது. முஸ்லிம்களுடைய படையின் இந்த நெருப்பு தொடர்பான விஷயம் வெகு தூரம் வரை பரவியது. இதனால் இறைவன் எதிரிகளை தோல்வியுறச் செய்தான்.

ஒரு குறிப்பு வருகின்றது. அதாவது முஅபத் கஸாயீ இந்த சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்தார். மேலும் பிறகு அவர் அபூஸுஃப்யானிடம் சென்றார். மேலும் குறைஷிகளுக்கு இஸ்லாமியப் படையை குறித்த அச்சத்தை ஏற்படுத்தினார். இதனுடைய விவரங்கள் இவ்வாறு கூறப்படுகின்றன: அதாவது முஅபத் பின் அபூ முஅபத் கஸாயீ பெருமானார் (ஸல்) அவர்களை சந்தித்தார். அந்த தருணம் வரை இணை வைப்பாளராக இருந்தார். சில வரலாற்று ஆசிரியர்கள் இந்த சந்தர்ப்பத்தில் அவர் இஸ்லாத்தை தழுவி விட்டார் என்றும்

எழுதியுள்ளார்கள். இருப்பினும், அவர் அந்த நேரத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை; மாறாக, பின்னர் தான் இஸ்லாத்திற்கு வந்தார் என்று பெரும்பாலானவர்கள் கூறுகின்றார்கள்.

பனீ கஸானாவின் நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் இணை வைப்பாளர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் பற்றை வெளிப்படுத்தினார்கள். இருப்பினும் அவர்களின் மற்ற கோத்திரத்தின் மக்கள் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். பற்றை வெளிப்படுத்தவும் செய்தார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் வாக்குறுதி செய்திருந்தார்கள். அதாவது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் எதையும் மறைத்து வைக்க மாட்டார்கள். முஅபத் கூறினார்: முஹம்மத் (ஸல்) அவர்களே! உங்களுக்கும் உங்களுடைய ஸஹாபிகளுக்கும் ஏற்பட்ட துன்பம்; எங்களுக்கும் மிகவும் வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. எங்களுடைய விருப்பம் என்னவென்றால், இறைவன் உங்களுக்கு கண்ணியத்தை உயர்த்துவானாக! மேலும் உங்களை எல்லா விதமான தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக! இந்த கருணையை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் முஅபதிடம் கூறினார்கள்: அபூஸுஃப்யானின் தன்னம்பிக்கையை உடைப்பீராக! நீர் பயணத்தில் செல்கின்றீர்;அவரை சந்திப்பீர்; எனவே அவரை சிறிது அச்சமூட்டுங்கள்;

இவ்வாறு அன்னார் (ஸல்) தம்முடைய நுட்பமான ஞானத்தை பயன்படுத்தினார்கள். பிறகு மூஃபத் அங்கிருந்து மக்காவை நோக்கி வைக்கப்பட்டார். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹம்ராஅல் அஸதிலேயே தங்கியிருந்தார்கள். அவர் ரவ்ஹா என்ற இடத்தில் அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய கூட்டாளிகளை சந்தித்தார். ரவ்ஹா மதீனாவில் இருந்து ஏறக்குறைய 40 மைல் தொலைவில் உள்ள ஓர் இடமாகும். அந்த நேரத்தில் குரேஷிகள் படை ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பக்கம் திரும்பி வருவதில் ஒருமித்த கருத்தில் இருந்தது. மேலும் அவர்கள் கூறினார்கள்: நாங்கள் அவர்களின் மிகச் சிறந்த தலைவர்கள் மற்றும் வழிநடத்துபவர்களைக் கொன்று விட்டோம்.

ஆனால், இவ்வாறான விஷயமும் ஏற்படவில்லை. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் உட்பட ஒரு சில நபர்களின் பெயர்கள் தான் இருந்தன. ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உட்பட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) போன்ற டஜன் கணக்கில் பிரபலமான தலைவர்களும், வழிநடத்துபவர்களும் இறைவனின் அருளினால் உஹது போரில் பாதுகாப்பாக இருந்தார்கள்.

பிறகு கூறினார்கள்: அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பே திரும்பி வந்து விட்டோம்; இப்பொழுது நாம் அவர்களின் மீதமுள்ள நபர்களையும் திரும்பிச் சென்று அழித்து விடுவோம்; மேலும் அவர்களை விட்டு பிரித்து விடுவோம். அபூஸுஃப்யான் முஅபத்தை சந்தித்தபோது அவர் கூறினார்: இவர் முஅபத் ஆவார்; இவரிடம் ஏதாவது செய்தி இருக்கும். முஅபதே! பின்னால் உள்ள நிலை என்ன? என்று அவர் கேட்டார்.

அவர் அபூஸுஃப்யானை அச்சப்படுத்துவதற்காக இவ்வாறு கூறினார்; நான் முஹம்மது (ஸல்) மற்றும் அன்னாருடைய தோழர்களை எவ்வாறான நிலையில் விட்டு வந்துள்ளேன் என்றால் அவர்கள் வலுவான ஒரு படையுடன் உங்களை தேடி வந்து கொண்டிருக்கின்றார்கள். அதாவது நான் இன்று வரை இவ்வளவு பெரிய படையை கண்டதில்லை. அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் முன்னர் இவர்களுடன் இணையாமல் இருந்தனர். ஆனால் அவர்களும் தற்போது இணைந்து விட்டார்கள்.

இது அவர் தாமே உருவாக்கிய கதையாகும்.

மேலும் அவர்கள் உங்களைப் பிடிக்காமல் மேலும் பழிவாங்காமல் திரும்பிச் செல்ல மாட்டோம் என்று உறுதி கொண்டுள்ளார்கள். தங்களுடைய சமுதாயத்தின் காரணத்தினால் மிகவும் கோபமாக இருக்கின்றார்கள்.தங்களுடைய இந்த செயலினால் மிகவும் வெட்கப்பட்டுள்ளார்கள். அதாவது முன்பு இவர்கள் கலந்து கொள்ளவில்லை. அவர்களிடம் உங்களுக்கு எதிராக எவ்வாறான கோபம் இருக்கின்றது? என்றால் இவ்வளவு கடுமையான கோபத்தை நான் பார்த்ததில்லை. அபூஸுஃப்யான் கூறினார்: உமக்கு அழிவு உண்டாகட்டுமாக! நீ என்ன கூறுகின்றாய்? அதற்கு, அவர் கூறத் தொடங்கினார்: எதுவரை என்றால், உம்முடைய குதிரையின் நெற்றியை பார்க்காமல் நீ இங்கிருந்து புறப்படமாட்டாய்;

இதுவும் அவர்களுடைய ஒரு பழமொழி ஆகும். அதாவது திரும்பி செல்வது அழிவை தராமல் இருக்கட்டும்.

இறைவன் மீது ஆணையாக! அவர்களை வெற்றி கொண்டு வேருடன் பிடுங்கி எறிய வேண்டும் என்று நாங்கள் உறுதி எடுத்துள்ளோம் என்று அபூஸுஃப்யான் கூறினார்.

முஅபத் கூறினார்: நான் இந்த செயலில் இருந்து உன்னைத் தடுக்கின்றேன். எவ்வாறான பீதியை ஏற்படுத்தும் விஷயத்தை நான் பார்த்துள்ளேன் என்றால், அது கவிதை எழுத என்னை வைத்து விட்டது. அது என்ன கவிதைகள்? என்று அபூஸுஃப்யான் கேட்டார்.

كَادَتْ تُهَدُّ مِنَ الْاَصْوَاتِ رَاحِلَتِى اِذْ
سَالَتِ الْاَرْضُ بِالْجُرْدِ الْاَبَابِيْلِ
تَرْدِى بِاُسْدٍ كِرَامٍ لَا تَنَابِلَةٍ
عِنْدَ اللِّقَاءِ وَلَا مِيلٍ مَعَازِيلِ
فَظَلْتُ عَدْوًا اَظُنُّ الْاَرْضَ مَائِلَةً
لَمَّا سَمَوْا بِرَئِيْسٍ غَيْرِ مَخْذُوْلِ
فَقُلْتُ وَيْلَ ابْنِ حَرْبٍ مِنْ لِقَائِكُمْ
اِذَا تَغَطْمَطَتِ الْبَطْحَاءُ بِالْجِيْلِ
اِنِّى نَذِيْرٌ لِاَهْلِ الْبَسْلِ ضَاحِيَةً
لِكُلِّ ذِىْ اِرْبَةٍ مِنْهُمْ وَ مَعْقُوْلِ
مِنْ جَيْشِ اَحْمَدَ لَا وَخَشٍ تَنَابِلَةٍ
وَلَيْسَ يُوْصَفُ مَا اَنْذَرْتُ بِالْقِيْلِ

பொருள்: பூமியில் உயர் ரக குதிரைகள் கூட்டம் கூட்டமாக சென்றன. அப்பொழுது அதனுடைய ஓசையினால் என்னுடைய பெண் ஒட்டகம் நடு நடுங்கி விழுந்து விட்டது.இப்பொழுது அங்கு வெறும் ஒரு குதிரை தான் உள்ளது.அவரும் எவ்வாறான வரைபடத்தை உருவாக்கினார் என்றால், தன்னுடைய கவிதையினால் அந்த மக்களை அவர் அச்சப்படுத்தி விட்டார். பிறகு கூறினார்: அந்தக் குதிரை சிங்கத்தைப் போன்றது. அது வீர மிக்க போர் வீரர்களை சுமந்து கொண்டு உள்ளது. அது ஒருபோதும் கவனக் குறைவுடன் இருக்கக் கூடியதும் அல்ல ; மேலும் சவாரி செய்ய தெரியாததும் அல்ல. அதாவது போரில் மிகவும் தேர்ச்சிப் பெற்ற மேலும் வாள், அம்புகளால் ஆயுதங்கள் ஏந்திய, போர் மைதானத்தில் தனித்துவமாக தென்படக் கூடியதாக இருந்தது. இது குறித்த செய்தியை உங்களுக்கு தர வேண்டும் என்பதற்காக நான் ஓடி வந்துள்ளேன். மேலும் எனக்கு என்ன தோன்றுகின்றது? என்றால், அந்த குதிரைகளுக்கு முன்பு பூமி குனிந்து கொண்டிருக்கின்றது. அதன் மீது வல்லமை மிக்க போர் வீரர்கள் உயர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தனிமையில் அல்ல. அதாவது படையுடன் முன்னேறி வந்து கொண்டிருக்கின்றார்கள். மேலும் நான் என்னுடைய உள்ளத்தில் கூறினேன். படையே! உன்னிடம் போர் செய்வதினால் போரின் மைந்தன் அதாவது அபூஸுஃப்யானிற்கு அழிவாகும். எப்பொழுது ஒரு மைதானம் படையினுடைய சத்தத்தினால் நிரம்பிவிடுமோ நான் குரேஷிகளுடைய ஒவ்வோர் அறிவுடைய மற்றும் புத்திக் கொண்ட மனிதருக்கு அஹ்மத் (ஸல்) அவர்களின் இந்த மாபெரும் படை குறித்து எச்சரிக்கை செய்கின்றேன். அவருடைய படை இயலாதவர்கள் மற்றும் தைரியம் இல்லாதவர்களை கொண்டதாக இல்லை. அந்தப் படையின் திகிலைக் குறித்து வார்த்தைகளால் கூறமுடியாது. அது குறித்து நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன்.

முஅபத் தனது பீதியூட்டும் பேச்சாலும் ,அவருடைய இந்த கவிதைகளுடன் ஸஃப்வான் பின் உமையா உடைய உரையாடலினாலும் அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய கூட்டாளிகளின் தன்னம்பிக்கை வலுவிழந்து போய்விட்டது.மேலும் அவர்களிடம் நடுக்கமும், திகிலும் உருவாகி விட்டது. மேலும் எந்த அளவிற்கு விரைவாக இயலுமோ அந்த அளவிற்கு விரைவாக தன்னுடைய படையை மக்காவிற்கு திரும்பி கொண்டு சேர்ப்பதே பாதுகாப்பு என்று அபூஸுஃப்யானுக்கு தோன்றியது.

இது குறித்து ஆராய்ச்சி குழுவின் தரப்பிலிருந்து ஒரு குறிப்பு வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் முஅபதிடம் கூறினார்கள். அபூஸுஃப்யானின் தைரியத்தை தகர்ப்பீராக!இது வரலாற்றில் சில நூல்களில் எழுதப்பட்டும் உள்ளது. மேலும் சிலர் இதை கூறவும் இல்லை. கூறுகின்றார்கள்: போரின் நுட்பமான செயல்களின் அடிப்படையில் இது சாத்தியமாகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் முஅபதிடம் இவ்வாறு பேசி இருக்கலாம். மேலும் இதுவும் சாத்தியமாகும். இது சிந்தனைக்கு நெருக்கமான விஷயமாக இருக்கின்றது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் அவரிடம் எதுவும் கூறாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவர் முஸ்லிம்கள் மீது கருணை கொண்டவராக இருந்ததால் அல்லாஹ் அவருடைய உள்ளத்தில் இந்த விஷயத்தை போட்டு இருக்கலாம். மேலும் அவர் தன் புறம் இருந்தே அபூஸுஃயானுக்கு இந்த அனைத்து விஷயங்களையும் கூறி இருக்கலாம்.

எவ்வாறு இருப்பினும், இது இவர்களுடைய குறிப்பாகும். ஆனால், முஅபத் என்னவெல்லாம் கூறினாரோ அது அவருடைய கருத்தாகும். பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் தெளிவான சொற்களில்

எந்தவிதமான தவறான விஷயத்தையும் பேசும்படி கூறவில்லை. ஆனால் எந்த அடிப்படையில் அவர்களை அவர் அச்சப்படுத்தினாரோ, எவ்வாறான வரைபடத்தை அவர் வரைந்தாரோ அதன் மூலமாக நிராகரிப்பாளர்கள் பயந்து விட்டார்கள். இந்த தருணத்தில் இணை வைப்பாளர்களின் படை மக்காவிற்கு திரும்பி செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டது. அப்துல் கைஸை சேர்ந்த ஒரு குழு அபூஸுஃப்யானை கடந்து சென்றது. அது அந்த இடத்திலேயே தங்களுடைய கூடாரங்களை அமைத்திருந்தது. அப்பொழுது, எங்கு செல்கின்றீர்கள்? என்று அவர் வினவினார். நாங்கள் மதீனா செல்கின்றோம் என்று அவர்கள் கூறினர். அப்போது, அபூஸுஃப்யான் வெறும் பொய் பிரச்சாரம் செய்யும் பொருட்டு, தன்புறமிருந்து உளவியல் தாக்குதலை நடத்தினார். ஆனால், அது பயனற்ற தாக்குதலாக இருந்தது. அதை அவர் செய்ய நினைத்தார். மேலும் இது எப்படிப்பட்டது? என்றால் அவர் கூறினார்: நீங்கள் என் புறமிருந்து முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இந்த தூதுச் செய்தியை வழங்குவீர்களா? (அவ்வாறு செய்தால்) நான் உங்களுக்கு உக்காள் திருவிழாவின் போது உலர் திராட்சையால் நிறைந்த ஒட்டகத்தை வழங்குவேன். சரி! என்று அவர்கள் கூறினர். நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை சந்திக்கும்பொழுது அவரிடம் கூறுங்கள்; நாங்கள் உங்கள் பக்கமும் உங்களுடைய தோழர்களின் பக்கமும் வருவதில் ஒருமித்தக் கருத்துக் கொண்டுள்ளோம்; எனவே உங்களில் எஞ்சியுள்ள மக்களையும் வேரோடு பிடுங்கி எறிந்து விடுவோம்; நாங்கள் உங்களை பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றோம். மேலும் இதனை கூறியதற்கு பிறகு அபூஸுஃப்யான் மக்கா நகரை நோக்கி செல்ல ஆரம்பித்தார். அந்தக் குழு ஹம்ராஅல் அஸத் என்ற இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்களை வந்தடைந்தது. அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய கூட்டாளிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக என்ன கூறினார்களோ அதை அப்துல் கைஸ் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினார். அன்னார் (ஸல்) அதைக் கேட்டதற்கு பிறகு கூறினார்கள்:

حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْل

எங்களுக்கு அல்லாஹ் போதுமானவனாக இருக்கின்றான்; மேலும் அவன் எவ்வளவு நல்ல பாதுகாவலனாவான்.

எவ்வாறு இருப்பினும், ஹம்ராஅல் அஸத் என்ற இடத்தில் சிறிது தங்கி இருந்தார்கள். பின்னர் இஸ்லாமியப் படை அங்கிருந்து திரும்பி சென்றும் விட்டது. ஏனெனில், அந்த நிராகரிப்பாளர்கள் அங்கிருந்து திரும்பி புறப்பட்டு விட்டனர்.

இது தொடர்பாக விளக்கங்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; அதாவது முஅபத் கஸாயீ என்பவரின் பேச்சைக் கேட்டு அபூஸுஃப்யான் மதீனாவின் பக்கம் செல்வதிலிருந்து தம்முடைய எண்ணத்தை கைவிட்டு விட்டார். மேலும் மக்காவிற்கு புறப்பட்டு விட்டார். மூஃபத் ஒரு நபர் மூலமாக அபூஸுஃப்யான் புறப்பட்ட செய்தியை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அனுப்பி வைத்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் திங்கள், செவ்வாய் மற்றும் புதன்கிழமை அங்கு தங்கியிருந்தார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் திரும்பிச் சென்றார்கள். பிலாதரீ கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த பயணத்திற்காக மதீனாவில் இருந்து ஐந்து நாட்கள் வெளியே இருந்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை மதீனா வந்தடைந்தார்கள். ஐந்து நாட்கள் மதீனாவில் இருந்து வெளியே இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா திரும்பி வருவதற்கு முன்பு முஆவியா பின் முகீராவை கைது செய்து வைத்திருந்தார்கள். முஆவியா பின் முகீரா அப்துல் மாலிக் பின் மர்வானின் பாட்டன் ஆவான். முஆவியா மட்டுமல்லாமல் அபூ உஸ்ஸ ஜமஹ்ஹீ என்பவனையும் கைது செய்து வைத்திருந்தார்கள். முஆவியா பின் முகீரா தொடர்பாக அறிவிப்புகளில் உள்ளது. அதாவது ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) ஆகியோர் முஆவியாவை ஹம்ராஅல் அஸதில் இருந்து திரும்பும்போது கொலை செய்தார்கள். இதற்கான காரணம் என்னவென்றால், முஆவியா மதீனாவில் மறைந்திருந்தான். மேலும் மதீனாவின் சூழல் குறித்து எதிரிகளுக்கு செய்தி அனுப்பிக் கொண்டிருந்தான். அவன் பிடிப்பட்டபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் அடைக்கலத்தில் சென்று விட்டான். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அவனுக்காக பாதுகாப்பு வேண்டி இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதி மற்றும் பாதுகாப்பு வழங்கும்பொழுது கூறினார்கள்: மூன்று நாட்களுக்குள் இங்கிருந்து அவன் சென்று விட வேண்டும்; ஒருவேளை அவன் மூன்று நாட்களுக்குப் பிறகு தென்பட்டான் என்றால் அவனைக் கொன்று விடுங்கள். ஆனால், அவன் மூன்று நாட்களுக்குப் பிறகும் அங்கேயே தங்கியிருந்தான். மேலும் ஒளிந்து இருந்தான். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த மூவரிடமும் அதாவது ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) ஆகியோரிடம் கூறினார்கள். நீங்கள் இன்ன இடத்தில் அவன் ஒளிந்திருப்பதை பார்ப்பீர்கள். எனவே அந்த இருவரும் அங்கு சென்றார்கள். அவனை கண்டார்கள். அவனைக் கொலை செய்தார்கள்.

பின்னர் எழுதப்பட்டுள்ளது: ஹம்ராஅல் அஸத் எனும் இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இணை வைப்பாளர்களின் கவிஞரான அபூ உஸ்ஸீயைக் கைது செய்தார்கள். இந்த அபூ உஸ்ஸீ பத்ர் போரின் நேரத்தில் முஸ்லிம்களுடைய கையால் கைது செய்யப்பட்டான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் தன்னுடைய வறுமை மற்றும் தன்னுடைய மகள்களை காரணம் கூறினான்; மேலும் எனக்கு குடும்பம் இருக்கின்றது; என்னுடைய மகள்களுக்கு வேறு எந்த கண்காணிப்பாளரும் இல்லை ; எனவே என் மீது கருணை காட்டுங்கள் என்று கூறினான். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவனுடைய மகள்களின் காரணமாக அவனிடம் எந்த விதமான ஈட்டுத் தொகையும் பெறாமல் கருணையின் அடிப்படையில் விடுதலை செய்து விட்டார்கள். மேலும் எதிர்காலத்தில் நான் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக (போர் புரிய) வரமாட்டேன்; மேலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக படையினை திரட்ட மாட்டேன் என்றும் அவனிடமிருந்து வாக்குறுதி வாங்கினார்கள். ஆனால் அவன் தன்னுடைய உடன்படிக்கையை முறித்தான். மேலும் தன்னுடைய கவிதைகளின் மூலமாக அவர்களை தூண்டிவிட ஆரம்பித்தான். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக போர் செய்யும்படி தூண்டினான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த நபர் இந்த முறை தப்பித்து செல்லக் கூடாது என்று துஆ செய்தார்கள். இந்த அடிப்படையில் உஹது போருக்குப் பிறகு இணை வைப்பாளர்கள் திரும்பியபொழுது ஹம்ராஉல் அஸத் எனும் இடத்தில் தங்கினார்கள். அப்பொழுது அபூ உஸ்ஸீயை தூங்கிக் கொண்டிருக்கும் நிலையில் விட்டு விட்டு சென்றுவிட்டார்கள். அவன் விழிந்த பிறகும் கவனக் குறைவுடன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்கள் கைது செய்தார்கள். இந்தப் போரில் இந்த ஒரு இணை வைப்பவன் மட்டுமே கைது செய்யப்பட்டான். ஒரு கூற்றின் அடிப்படையில் அவனை கைது செய்தவர் ஹஸ்ரத் உமைர் பின் அப்தில்லாஹ் ஆவார். கைது செய்யப்பட்ட பிறகு அபூ உஸ்ஸீ பெருமானார் (ஸல்) அவர்கள் முன்பு கொண்டு செல்லப்பட்டான்; பெருமானார் (ஸல்) அவர்களை அவன் கண்ட உடன், முஹம்மத் (ஸல்) அவர்களே, என்னை விட்டு விடுங்கள்; என் மீது கருணை காட்டுங்கள். மேலும் என்னுடைய பெண் மக்களின் காரணத்தினால் என்னை விடுதலை செய்து விடுங்கள்; நான் உங்களுக்கு வாக்குறுதி வழங்குகின்றேன். அதாவது எதிர்காலத்தில் இவ்வாறான எந்த விதமான செயலையும் செய்ய மாட்டேன் என்றான். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இல்லை ; இறைவன் மீது ஆணையாக! உனது முகத்திற்கு மக்காவை பார்க்கும் பாக்கியம் இல்லை.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களை நோக்கி இவ்வாறு கட்டளை வழங்கியவாறு கூறினார்கள்: இவனுடைய கழுத்தை துண்டித்து விடுங்கள்; ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இந்தக் கட்டளை ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். மேலும் அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஒரு நம்பிக்கையாளர் ஒரு புற்றில் இரண்டு முறை கடிபட மாட்டார். இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் காலங்களில் எடுத்துரைக்கப்படும்.

உலகத்தின் சூழலுக்காக தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் எல்லாவிதமான தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக!

இப்பொழுது நான் ஒரு காயிப் ஜனாஸா தொழுகையை நடத்துவேன். அது மதிப்பிற்குரிய ஃபராஸ் அஹ்மத் தாஹிர் ஸாஹிப் அவர்களுடையதாகும். அவர் ஆஸ்திரேலியாவில் கடந்த நாளில் ஷஹீதாகி விட்டார். இந்த செய்தி தொடர்பாக எழுதப்பட்டுள்ளது: ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரத்தின் பண்டாயி என்ற பிரபலமான பகுதியின் ஷாப்பிங் சென்டரில் ஒரு ஆஸ்திரேலியா நபர் கத்தியால் தாக்கி ஷஹீது ஆக்கிவிட்டார். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

மர்ஹூம் ஷாப்பிங் சென்டரில் செக்யூரிட்டி கார்டாக பணி செய்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

கொண்டிருந்தார். அன்னாருடைய வயது 30 ஆகும். மேலும் திருமணம் ஆகாத நபர் ஆவார். இந்த தாக்குதலில் 12 நபர்கள் காயமடைந்தனர். மேலும் 6 நபர்கள் மரணமடைந்துள்ளார்கள். மரணமடைந்த ஆறு நபர்களில் ஐந்து பேர் பெண்கள் ஆவர்.

ஃபராஸ் அஹ்மத் தாஹிர் ஸாஹிப் மர்ஹூம் ரப்வாவைச் சேர்ந்தவர் ஆவார். 2018 -ல் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு சென்று விட்டார்கள். நான்கு ஆண்டுகள் அங்கு இருந்தார்கள். பிறகு கடந்த வருடம் யுஎன்எச்சிஆர்(U N H C R) மூலமாக ஆஸ்திரேலியா சென்றார். கடந்த மாதம் அவர் தன்னுடைய செக்யூரிட்டி லைசென்ஸ் வாங்கினார். மேலும் அவரின் மரணம் நிகழ்ந்த நாளன்று ஷாப்பிங் சென்டரில் அவருக்கு பகலில் டியூட்டி எழுதப்பட்டிருந்தது. இரவில் டியூட்டி கொடுத்து வந்திருந்தார். ஆனால், அன்றுதான் பகலில் அவருடைய முதல் டியூட்டியாக இருந்தது.

விவரங்களின் அடிப்படையில் மதிப்பிற்குரிய ஃபராஸ் அஹ்மத் தாஹிர் ஸாஹிப் அவர்கள், மக்கள் கூச்சல் எழுப்பியவாறு இங்கும் அங்கும் ஓடுவதை பார்த்து தாக்குதல் நடத்தியவனை தடுப்பதற்காக முன்னேறி சென்றார். இதனால் தாக்குதல் நடத்தியவன் அவரை தாக்கினான். இதனால் அவர் உயிர் பிழைக்க முடியாமல் போய்விட்டது. இந்தத் தாக்குதலில் மரணித்தவர்களில் அவர் முதல் நபர் ஆவார். அவருடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவருடைய முப்பாட்டனார் மதிப்பிற்குரிய மியான் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அவர்கள் ஷாஹ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்கள். அவருடைய பாட்டனார் மதிப்பிற்குரிய ஷஃபீ அஹ்மத் யார் ஸாஹிப் அவர்கள் மிக நீண்ட காலமாக ஜமாஅத்தின் சேவகராக இருக்கின்றார்கள். அன்னாருடைய தந்தை பஷீர் அஹ்மத் ஸாஹிப் 2005-ல் அன்னாருடைய தாயார் ரஸியா பேகம் ஸாஹிபா 2014-ல் மரணம் அடைந்து விட்டார்கள். அன்னார் தமக்குப் பின்னால் மூன்று சகோதரர்கள் இரண்டு சகோதரிகள் மற்றும் பாட்டனார் சூஃபி அஹ்மத்யார் ஸாஹிபை விட்டு சென்றுள்ளார்கள்.

இது தொடர்பாக விவரங்கள் மேலும் இவ்வாறு வந்துள்ளன. அதாவது ஆஸ்திரேலியாவின் பிரதமர் மேலும் நியூ சவுத் வேல்ஸ்-ன் பிரீமியர் அவர்கள் ஃபராஸ் அஹ்மத் தாஹிர் ஸாஹிப் அவர்களுடைய வீரம் மற்றும் தியாகத்தை நினைவுகூர்ந்து இரங்கல் தெரிவித்துள்ளார்கள்.இதேபோன்று ஆஸ்திரேலியாவில் வசித்து வரும் பாகிஸ்தானின் ஹைகமிஷனர் அவர்கள் ஃபராஸ் அஹ்மத் தாஹிர் ஸாஹிப் அவர்களின் வீரம் குறித்த நற்குறிப்புடன் அனுதாபத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் எல்லாவிதமான ஒத்துழைப்புக்கான வாக்குறுதியும் வழங்கியுள்ளார்.

அன்னார் இந்த சம்பவம் தொடர்பாக மீடியாவில் 120-க்கும் மேற்பட்ட செய்திகள் வெளியாகியுள்ளன. மேலும் வந்து கொண்டிருக்கின்றன. இன்று அன்னாருடைய ஜனாஸா அங்கு நடைபெற்றது. இதிலும் அங்குள்ள பிரீமியர் பிரைம் மினிஸ்டர் போன்றோர் கலந்து கொண்டார்கள். அவர்களும் மீண்டும் தங்களுடைய நற்குறிப்பை வெளியிட்டுள்ளார்கள். சமூக வலைதளங்களில் ஃபராஸ் அஹ்மத் தாஹிர் அவர்களின் வீரம் மற்றும் தியாகத்தை மிகவும் அழகிய சொற்களில் நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றனர். மேலும் பெரும்பாலான மக்கள் அவர்களை நேஷனல் ஹீரோ என்று அழைக்கின்றார்கள். அவருடைய இந்த தியாகம் வெளிப்படுத்துவது என்னவென்றால் அவர்கள் பாகிஸ்தானில் இருந்து மரணத்திற்கு அஞ்சியவாறு அங்கு செல்லவில்லை; மாறாக அவர்களுக்கு இழைக்கப்படும் மார்க்க ரீதியிலான அநீதிகள் கட்டுப்பாடுகளின் காரணமாக அவற்றிலிருந்து கஷ்டத்தை உணர்ந்து தன்னுடைய நாட்டை விட்டு சென்றிருந்தார்கள். அங்கு அவர்களுக்கு அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் பெயரை உச்சரிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஸதர் அத்னான் காதிர் அவர்கள் கூறுகின்றார்கள்: 21 ஏப்ரல் ஞாயிற்றுகிழமை அன்று ஆஸ்திரேலிய அரசாங்கம் சார்பாக ஷாப்பிங் மாலுக்கு அருகில் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தது. அதனுடைய நோக்கம் மரணமடைந்த இந்த அனைத்து நபர்கள் தொடர்பாக தங்களது ஆழ்ந்த இரங்கலை வெளிப்படுத்துவது ஆகும். இந்த நிகழ்ச்சியில் ஆஸ்திரேலியாவின் பிரதமர், பிரீமியர் நியூ ஸவுத்வேல்ஸின் பிரீமியர் எதிர்கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் வெளியூர் கவுன்சில்களுடைய மேயர்களும், காவல்துறையினர்களும், ராணுவத்தினர் மற்றும் கடற்படையின் உயர் அதிகாரிகளும் மிகப் பெரிய எண்ணிக்கையில் மீடியா மற்றும் வாழ்வின் மற்ற துறைகளை சார்ந்தவர்களுடன் தொடர்புடைய பெரும் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஜமாஅத்தினுடைய உறுப்பினர்களையும் இந்த நிகழ்ச்சிக்காக அழைத்திருந்தார்கள்.

அன்னாருடைய மூத்த சகோதரர் முதஸ்ஸிர் பஷீர் கூறுகின்றார்கள்: மர்ஹூம் சிறுவயதிலிருந்தே மிகவும் உழைக்கக் கூடிய புன்சிரிப்பு கொண்ட தைரியமான சிறுவராக இருந்தார். அன்னாருடைய வயது 11 ஆக இருந்தபோது எங்களுடைய தந்தையின் மரணம் நிகழ்ந்தது. கூறுகின்றார்கள்: எங்களுடைய மூத்த சகோதரர் முஸஃபர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் எங்களை ஒரு தந்தையைப் போன்று கவனித்துக் கொண்டார்கள். மர்ஹூம் தன்னுடைய கல்வி படிப்புடன் சகோதரரின் வியாபாரத்திலும் ஒத்துழைப்பு நல்கி வந்தார்கள். மர்ஹூம் மிகவும் உழைக்கக் கூடிய மேலும் தன்னுடைய சகோதர, சகோதரிகளுடன் மிகவும் நேசம் கொண்டவராக இருந்தார். மென்மையான இயல்பை கொண்டவர். இயல்பில் நல்லவராக இருந்தார். எப்பொழுதும் சகோதர சகோதரிகளின் எந்த பேச்சிலும் வெறுப்படைய மாட்டார். அன்னார் ஜமாஅத்துடைய வேலைகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்கு பெற்றார். எவ்வளவு காலம் பாகிஸ்தானில் இருந்தாரோ மேலும் பிறகு இலங்கை அதன் பிறகு ஆஸ்திரேலியா எங்கெல்லாம் தங்கி இருந்தாரோ ஜமாஅத்தினுடைய பணிகளில் டியூட்டி கொடுப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். கிலாஃபத்துடன் மிகவும் பற்று மற்றும் நேசத்தின் தொடர்பு இருந்தது. தனக்கு நேஷனல்டி கிடைத்த உடன் முதலில் லண்டன் சென்று கலீஃபத்துல் மஸீஹை சந்திக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தார்.

இது அவருடைய விருப்பமாக இருந்தது. அன்னாருடைய இளைய சகோதரர் ஸீராஸ் அஹ்மத் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை மிகவும் அழகாக ஓதக் கூடியவராக இருந்தார். மேலும் தொழுகையை நிலை நாட்டுவதில் கவனமாக இருந்தார்.

முரப்பி காம்ரான் முபஷ்ஷீர் ஸாஹிப் கூறுகின்றார்:

நான் அவரிடம் கண்ட சிறப்பு என்னவென்றால், ஜமாஅத்தின் பெரியவர்கள் மற்றும் முரப்பிமார்களுக்கு மிகவும் கண்ணியம் வழங்கி வந்தார். அவர்கள் புறமிருந்து ஏதாவது வழிகாட்டல் வழங்கப்பட்டது என்றால் அதை அவர் மறுக்க மாட்டார். ஒருவேளை அவரிடம் அவருடைய ஏதாவது தவறு குறித்து கவனமூட்டப்பட்டால் அதை ஒருபோதும் வெறுப்பாக நினைக்க மாட்டார். மாறாக, மிகவும் பணிவுடன் அமைதியான முறையில் ஒப்புக் கொள்வார். மேலும் தன்னுடைய தவறை ஒப்புக் கொண்டு விடுவார். மேலும் அதனை சீர்திருத்திக் கொள்வார்.

அவருடைய ஒரு நண்பர் அஹ்மத் இப்ராஹீம் கூறுகின்றார்: அவர் மார்க்கம் மற்றும் கிலாஃபத் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார்; ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு கண்ணியம் வழங்கக் கூடியவராகவும், தொழுகையை நிலைநாட்டக் கூடிய நபராகவும் இருந்தார். எனக்கு அவருடன் ஒரு சகோதரர் மற்றும் நண்பர் என்ற உறவு இருந்தது. எப்பொழுதாவது ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக அவரை கடிந்து கொண்டாலும் கூட தன்னுடைய பார்வையை அவர் தாழ்த்திக் கொள்வார். மேலும் கூறுவார்: எதிர்காலத்தில் இவ்வாறான முறையீட்டிற்கு சந்தர்ப்பம் கொடுக்க மாட்டேன். மிகவும் சிரித்த முகம் மற்றும் மிகவும் நேசம் கொண்ட நபராக இருந்தார்.

பிர்ஸ்பன் ஜமாஅத்தின் ஸத்ர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: கடந்த மார்ச் மாதத்தில் ஒரு வாரத்திற்காக பிரிஸ்பன் வந்தார். மேலும் தான் வந்ததன் நோக்கம் தன்னுடைய நண்பர்கள், நெருங்கியவர்களை சந்திக்க வேண்டும் என்று கூறினார்: அத்துடன் கூறினார்: ஒருவேளை உள்ளத்தில் ஏதாவது வெறுப்பு இருக்குமேயானால் அல்லது முறையீடுகள் இருக்கும் என்றால் நான் அதற்காக மன்னிப்பு கேட்பதற்காகவும், சமாதானம் செய்து கொள்வதற்காகவும் வந்துள்ளேன் என்றார். மேலும் மீண்டும், மீண்டும் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹூதா ஹாஃபிஸ் என்று கூறி விடைபெறுவதற்காக அவர் வந்திருந்தது போன்று இருந்தது.

அவருடைய ஒரு நண்பர் ஷஜர் அஹ்மத் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஓர் உழைப்பாளியாகவும், தைரியசாலியாகவும், மேலும் கடமையை அறியக் கூடிய நபராகவும் இருந்தார்.

அவருடன் காயம் ஏற்பட்ட மற்றொரு காவலாளி கூறுகின்றார்: ஷாப்பிங் சென்டரில் தாக்குதல் நடத்தபவர்கள் வந்த உடனேயே அவர்களை பார்த்து மக்கள் பயந்து ஓடினார்கள். ஆனால், அவர் தைரியத்துடன் அவரை எதிர் கொண்டார். அவர்களை தடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டார். மேலும் அவர்களுக்கு எதிரே சென்று நின்றார்.மேலும் மற்றவர்களை காப்பாற்றுவதற்கு தன்னுடைய இன்னுயிரை அர்ப்பணம் செய்து விட்டார்.

சமூக வலைதளங்களில் மக்கள் ஃபராஸ் அஹ்மத் தாஹிர் ஸாஹிப் குறித்து தங்களுடைய இரங்கல்களை தெரிவித்து வருகின்றார்கள். கிறிஸ்மர்பி என்ற ஒரு நபர் தன்னுடைய கமெண்டில் எழுதுகின்றார்: தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பு ஓர் அழகிய உடை அணிந்திருந்த பாதுகாப்பு ஊழியர் ஃபராஸ் அஹ்மத் தாஹிர் தன்னுடைய நாட்டில் உள்ள அநீதியிலிருந்து விலகி இருந்து அமைதி மற்றும் நல்ல எதிர்காலத்திற்காக ஆஸ்திரேலியா வந்தார். அவர் தன்னுடைய கம்யூனிட்டியில் மிகவும் பிரபல்யமான நபர் ஆவார். அவர்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பொதுமக்களை பாதுகாப்பதற்காக தனது உயிரை நீத்தார். நான் அவருடைய குடும்பம் மற்றும் சமுதாயத்திற்கு எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இது மிகவும் வேதனையை அளிக்கக் கூடிய அசம்பாவிதமாகும். இதுபோன்ற பல்வேறு கருத்துகளை மக்கள் பதிந்துள்ளார்கள். எவர்கள் எல்லாம் ஷாப்பிங் மாலில் கண்டார்களோ மேலும் எவர்கள் எல்லாம் செய்தியை கேட்டார்களோ அவர்களும் இது குறித்து இரங்கலை பதிவிட்டுள்ளார்கள்.

ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவின் மாணவர் ஹூஸைர் அஹ்மத் கூறுகின்றார்: ஃபராஸ் அஹ்மத் தாஹிர் எனது பெரிய தந்தைவழி சகோதரர் ஆவார். நல்ல இயல்பு கொண்ட நபர் ஆவார். ஐவேளை தொழுகைகளை பேணக் கூடியவராவார். மற்றவருக்கு அது குறித்து கவனமூட்டக்கூடியவர் ஆவர். சந்திக்கும்போதெல்லாம் சிரித்தவாறு சந்திப்பார்; தன்னுடைய இளைய சகோதரரைப் போன்று என்னை கருதி பழகினார். ஏதாவது கூற வேண்டுமென்றால் ஏதாவது புரிய வைக்க வேண்டும் என்றால் மிகவும் அன்புடன் புரிய வைப்பார்.எப்பொழுதும் துஆவிற்காக கூறிக் கொண்டிருந்தார். நான் உங்களுக்காக துஆ செய்கிறேன். நீங்களும் எனக்காக துஆ செய்யுங்கள் என்று கூறுவார். கூறுகின்றார்கள்: கடைசியாக, அவருடைய ஷஹாதத் நிகழ்ந்த நாளன்று அவருடைய தொலைபேசி அழைப்பு வந்தது. அப்பொழுது ஆஸ்திரேலியாவின் நேரப்படி அதிகாலை 4 மணி இருக்கும். அவருடைய மூத்த சகோதரரிடம் கூறினார்: அதிகாலை நான்கு மணியாக இருக்கின்றது. இப்பொழுது உங்களுக்கு வேலைக்கு செல்ல வேண்டும் ; ஆகையால் உறங்குங்கள் என்றார். அப்பொழுது அவர் கூறினார்: நான் இப்பொழுது தஹஜ்ஜுத் தொழுது முடித்துள்ளேன். மேலும் உங்கள் அனைவருக்காகவும் துஆவும் செய்துள்ளேன். பிறகு ஃபஜ்ர் தொழுதுவிட்டு வேலைக்காக புறப்பட்டு செல்ல வேண்டும். உறங்குவதற்கு நேரமில்லை என்றார். அவருடைய பகல் ஷிப்ட்டுக்கான முதல் நாளாகும். இது இதற்கு முன்பு இரவு ஷிஃப்ட்டில் டியூட்டி செய்து கொண்டிருந்தார்.

பிறகு இவர் எழுதுகின்றார்கள்: எங்களுடைய குடும்பத்தில் இது மூன்றாவது ஷஹாதத் ஆகும். முதலில் எங்களுடைய பெரிய தந்தை முஹம்மது நவாஸ் ஸாஹிப் அவுராங்கி டவுண் கராச்சியில் 11 செப்டம்பர் 2012ல் ஷஹீதானார்கள். பிறகு எங்களுடைய மாமா இஜாஸ் அஹ்மத் ஸாஹிப் அவுராங்கி டவுண் கராச்சியில் 4 செப்டம்பர் 2013-ல் ஷஹீதானார்கள். இப்பொழுது ஃபராஸ் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் ஷஹீதாகி உள்ளார்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று, தான் மரணத்தின் அச்சத்தினால் நாட்டை விட்டு வெளியேறவில்லை; மாறாக, மார்க்க சுதந்திரத்திற்காக வந்துள்ளேன் என்பதை அவர் கூறிவிட்டார். அல்லாஹ் அவருடைய அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் அனைத்து உறவினர்களுக்கும் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

தமிழாக்கம்
மவ்லவி ஷஹாபுதீன்

* * * * *

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

## குத்பா பேருரை 3.5.24

12-ம் பக்கத் தொடர்ச்சி....

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சண்டைக்கான தீர்ப்பை வழங்குவதற்காக யூதர்களுடைய கோட்டைக்குள் செல்ல நேர்ந்தது. அன்னார் (ஸல்) எங்கு அமர்வார்களோ அதற்கு மேலே இருந்து ஒரு பெரும் பாறையை தள்ளி விட்டு அன்னாரை ஷஹீதாக்கி விடலாம் என்று அவர்கள் ஆலோசனை செய்தனர். ஆனால், இறைவன் அன்னாருக்கு தகுந்த நேரத்தில் கூறிவிட்டான். அன்னார் அங்கிருந்து எதுவும் கூறாமல் சென்று விட்டார்கள். பிறகு யூதர்கள் தங்களது தவறை ஒப்புக் கொள்ளவும் செய்தார்கள்.

உஹது போருக்கு பிறகு உடனடியாக நிகழ்ந்த சம்பவங்களும் ஹம்ரா உல் அஸத் போர் குறிப்பும் இங்கு நிறைவு பெறுகின்றன.

உலகின் சூழ்நிலைகளைக் குறித்தும், முஸ்லிம்களுடைய சூழ்நிலைகள் மற்றும் பாலஸ்தீனம் குறித்தும் துஆவிற்காக நான் கவனமூட்டி வருகின்றேன். கொஞ்ச காலத்திற்காக போர் நிறுத்தம் ஏற்பட்டு விடும் என்று சில பகுதிகளில் கருதப்படுகின்றது. ஆனால், சூழ்நிலைகளை பார்க்கும் போது அவ்வாறு நிகழ்ந்து விட்டாலும் கூட பாலஸ்தீனியர்கள் மீதான அநீதி முடிவுக்கு வராது என்றே தெரிகிறது.ஆகவே மிக அதிகமான துஆக்களுக்கான தேவை இருக்கின்றது. அல்லாஹ்வின் பக்கம் குனியக் கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் பாலஸ்தீனியர்களுக்கும் வழங்குவானாக. எவ்வாறு இருப்பினும், இந்த சூழ்நிலைகள் ஆணவம் கொண்டோரின் ஆணவத்தை நொறுக்குவதற்கான ஏற்பாட்டையும் உருவாக்கி விட்டது. அவர்களுடைய ஆணவத்தையும் நொறுக்குவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் ஆரம்பித்துவிட்டான் என்றே தெரிகிறது. இந்தப் பணி எப்பொழுது முழுமை பெறும்? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆயினும், எவ்வாறு இருப்பினும், இந்த ஆணவம் இப்பொழுது நொறுங்க ஆரம்பித்து விட்டது. அவர்களுக்குள்ளேயே அவர்களின் எதிர்ப்பாளர்கள் உருவாக ஆரம்பித்து விட்டார்கள். அமெரிக்காவிலும் எதிர்ப்புக் குரல் எழ ஆரம்பித்து விட்டது. எதிர்ப்புக் குரலை அடக்குவதற்கு இப்பொழுது ஆற்றலை பயன்படுத்த ஆரம்பித்து விட்டனர். ஆனால் அவ்வாறிருந்தும் இந்த தீப்பிழம்புகள் கொழுந்து விட்டெரியும். அல்லாஹ் உலகின் வல்லரசுகளுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் நீதியுடன் நடந்து கொள்வார்களாக. தமக்கென்று ஒரு நியதி; மற்றவர்களுக்கென்று இன்னொன்று. இந்த விஷயமே பிறகு ஒரு நேரத்தில் ஐ.நா உடைவதற்கும் காரணியாக அமைந்து விடும்.

அடுத்து, இரண்டாவதாக எனக்காக துஆவுக்காக கூற விரும்புகின்றேன். சிறிது காலமாக எனக்கு இதய வால்வு பிரச்சினை இருந்தது. இதற்கான மருத்துவ செயல்முறையை ஆரம்பிக்கலாம் என்று மருத்துவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். ஆனால் நான் காலம் தாழ்த்தி வந்தேன். ஆனால் மேற்கொண்டு காலம் தாழ்த்துவது பொருத்தமானதல்ல. அவ்வாறான நிலை வந்து விட்டது என்று மருத்துவர்கள் கூறினர். ஆகவே அவர்கள் கூறியதற்கு இணங்க கடந்த நாட்களில் இதய வால்வு மாற்றம் செய்வதற்கான மருத்துவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது; சரியாகிவிட்டது. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஆகவே மருத்துவர்களுடைய வழிகாட்டல்களுக்கு ஏற்ப சில நாட்கள் பள்ளிவாசலுக்கும் வர இயலவில்லை. நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வின் அருளால் மருத்துவ ரீதியாக என்ன செயல் நடவடிக்கை எடுக்க முடிந்ததோ அது வெற்றி பெற்று விட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் எநத அளவு வாழ்வை வழங்க இருக்கின்றானோ அது நன்கு பணியாற்றக் கூடிய வாழ்வாக அமைய துஆ செய்யுங்கள்.

தமிழாக்கம்

மவ்லவி APA. தாரிக் அஹ்மத்

* * * * *

## (மல்ஃபூஸாத்)1-ம் பக்கத் தொடர்ச்சி..

ஆக்கியிருக்கும்; இந்த ஹதீஸ்களோ இஸ்லாத்தின் பிரிவினைக்கும், அபாயகரமான மார்க்க வழிகேட்டிற்கும் அடித்தளம் அமைத்து இருக்கின்றன. இந்த ஹதீஸ்களோ பயனற்றவையாகும். மேலும் பொய்க்கு மேல் பொய்களை கொண்ட ஆதாரமற்ற அவற்றின் எண்ணற்ற முன்னறிவிப்புகளும் பொய்யான கதைகளுமாக இருக்கின்றன. இவை சில காலத்திற்கு பிறகு வரக் கூடிய தலைமுறைகளுக்கு முன்னால் இதேபோன்று பொருளற்றதாக எடுத்து வைக்கப்பட்டால் பின்னர் இஸ்லாமும் மகாபாரதத்தின் பொய்யான மார்கங்களைப் போன்று புராணங்களை அடிப்படையாகக் கொண்ட மார்க்கம் என்றும், தலையும் வாலுமற்ற மார்க்கம் ஆகும் என்றும் அந்த தலைமுறை தெளிவான சந்தேகத்தில் வீழ்ந்து விடும்.மேலும் தஜ்ஜாலை இறைவனாக ஆக்கக் கூடிய மற்றும் இறைவனின் முழுமையான பண்புகளிலிருந்து முழுமையான பங்கு கொடுக்கக் கூடிய மார்க்கத்தை கூட உண்மையென்றும், மேலும் அது ஏகத்துவ மார்க்கம் என்று அழைக்கப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளது என்ற விஷயத்தை கடுமையான ஏளனத்துடனும், எள்ளி நகையாடியவாறும் மிகவும் துணிச்சலுடன் கூறுவதற்கு எதிர்கால சந்ததிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 2, பக்கம் 7, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * *

## (தஃப்ஸீரே கபீர்)1-ம் பக்கத் தொடர்ச்சி..

ஆயிரக்கணக்கான இப்ராஹீம்கள் பிறந்தனர். இப்ராஹீம் (அலை) அவர்கள் முன் வைத்த அதே காட்சியை அவர்கள் உலகிற்கு முன்னால் வைத்து விட்டனர்.

சுருக்கமாக, அல்லாஹ் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களை மக்காவில் அனுப்பிய போதே உண்மையில் இதற்கான ஆயத்தம் இருந்தது. அதாவது ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வருகைக்கான ஏற்பாடாக அது இருந்தது. நீர் எமது இல்லத்தை தயார் செய்வீராக. ஏனெனில், எமது நேசத்திற்குரியவரும், எமது இறுதி ஷரீஅத்தைக் கொண்ட தூதரும் உலகில் தோன்ற இருக்கின்றார்; நீர் இன்றிலிருந்தே எமது நேசரின் வருகைக்கான ஏற்பாட்டில் மும்முரமாகி விடுவீராக. மேலும் இன்றிலிருந்தே எமது நேசருக்கு அபூபக்ரை வழங்கக் கூடிய சந்ததிகளை தோற்றுவிப்பீராக; எமது நேசருக்கு உமரை வழங்கக் கூடிய சந்ததிகளை தோற்றுவிப்பீராக; எமது நேசருக்கு உஸ்மானை வழங்கக் கூடிய சந்ததிகளை தோற்றுவிப்பீராக ;; எமது நேசருக்கு அலீயை வழங்கக் கூடிய சந்ததிகளை தோற்றுவிப்பீராக; எமது நேசருக்கு தல்ஹாவையும், ஸுபைரையும், அப்பாஸையும் வழங்கக் கூடிய சந்ததிகளை தோற்றுவிப்பீராக; இதேபோன்று நூற்றுக்கணக்கான தோழர்களை அவருக்கு முன்னால் அவர்கள் அர்ப்பணித்து விட வேண்டும். மேற்கண்ட வசனத்திற்கு இதுவே அர்த்தமாக இருந்தது. வெளிப்படையான பொருளிலோ மக்கா வாசிகள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு பிறகு எந்தவொரு நல்ல முன்மாதிரியையும் காட்டவில்லை. ஆயினும் இந்த முன்னறிவிப்பின் வெளிப்பாடு என்பது ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்திலேயே துவங்க வேண்டியிருந்தது. எனவே இறைவன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களை மக்காவில் கொண்டு வந்து தங்கும்படி செய்து விட்டான். ஏனெனில், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு தொண்டு செய்யக் கூடிய மற்றும் தம்மைத் தாமே அல்லாஹ்வின் கம்பீரத்தின் வெளிப்பாட்டிற்காக அர்ப்பணிக்கக் கூடிய சந்ததிகளை அவர்கள் ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதற்காக இறைவன் அவ்வாறு செய்தான்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 27, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * *

# ஜுமுஆ பேருரை

**உஹது போர் மற்றும் ஹம்ராஅல் அஸத் போரின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து நற்குறிப்பு மற்றும் உஹது போரின் முடிவு குறித்த விரிவான விவாதம்**

**நீங்கள் என்ன செய்ய விழைகின்றீர்கள்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தற்போது தான் முஹம்மத் (ஸல்) அவர்களின் படையை ஹம்ராஅல் அஸதில் சந்தித்து விட்டு வருகின்றேன்; நான் அதைப் போன்ற திகில் கொண்ட படையை ஒருபோதும் கண்டதில்லை. உஹதின் தோல்வியால் ஏற்பட்ட வெட்கத்தினால் அவர்களிடம் எந்த அளவிற்கு உத்வேகம் இருக்கின்றது என்றால் அவர்கள் உங்களை பார்த்த உடனேயே சாம்பலாக்கி விடுவார்கள் (கஸாஆ கோத்திரத்தின் தலைவர்)**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய சமூகத்தின் மையப் புள்ளியாக இருந்தார்கள்; மேலும் அன்னார் (ஸல்) குறைஷியர்களின் பகைமை மிக்க போர் நடவடிக்கையின் அசல் இலக்காக இருந்தார்கள். அன்னார் (ஸல்) இறைவனின் அருளினால் உயிருடன் இருந்தார்கள். அது மட்டுமின்றி பெரும் பெரும் ஸஹாபிகளும் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் உஹது போரில் பாதுாப்புடன் இருந்தார்கள்**

**கடந்த நாட்களில் இதய வால்வை மாற்றுகின்ற புரோஸிஜர் நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ் சரியாகிவிட்டது. அல்லாஹ் எந்த அளவு வாழ்வை வழங்க இருக்கின்றானோ அது நன்கு பணியாற்றக் கூடிய வாழ்வாக அமைய துஆ செய்யுங்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 மே 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **03 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹம்ரா அல்அஸத் போர் தொடர்பாக கூறப்பட்டு வந்தது. உஹது போரில் இருந்து மதீனாவுக்கு திரும்புதல் மற்றும் ஹம்ரா அல்அஸத் போர் தொடர்பாக எடுத்துரைக்கும் போது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களில் இருந்து தாம் தீர்மானித்த விஷயங்களை விவரித்தவாறு கூறுகிறார்கள்: அன்னார் (ரலி) எழுதுகிறார்கள்: அந்த இரவு, அதாவது உஹது போரில் திரும்பிய பிறகு வந்த இரவு மிகவும் அச்சுறுத்தும் இரவாக இருந்தது. ஏனெனில், வெளிப்படையாக பார்க்கும் போது குறைஷிய படை மக்காவை நோக்கி சென்று கொண்டிருந்தது. அவர்களின் இந்த நடவடிக்கை முஸ்லிம்களை கவனமற்றவர்களாக ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து விடக் கூடாதே, அவர்கள் திடீரென திரும்பி வந்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து விடக் கூடாதே என்ற அச்சமும் இருந்தது. ஆகவே அந்த இரவில் மதீனாவில் காவலுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக பெருமானார் (ஸல்)அவர்களின் வீட்டை முழு இரவும் ஸஹாபிகள் காவல் காத்துக் கொண்டிருந்தனர். காலை விடிந்த போது அந்த அச்சம் கற்பனையானதாக இருக்கவில்லை என்பது தெரிய வந்தது. ஏனெனில், ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குறைஷியப் படை மதீனாவில் இருந்து கொஞ்சம் தூரம் சென்று நின்றுவிட்டது என்றும், இந்த வெற்றியில் இருந்து பயன்பெற்றவாறு மதீனாவின் மீது ஏன் தாக்குதல் தொடுக்கக் கூடாது? என்ற வாதம் குறைஷிய தலைவர்களுக்குள் நடந்து கொண்டிருப்பதாகவும் அன்னாருக்கு தகவல் கிடைத்தது. நீங்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை கொலை செய்யவும் இல்லை ; முஸ்லிம் பெண்களை அடிமைகளாக கைப்பற்றவும் இல்லை ; முஸ்லிம்களின் செல்வத்தையும் பொருட்களையும் கைப்பற்றவும் இல்லை ; மாறாக நீங்கள் அவர்களை மிகைத்த போது, அவர்களை முற்றிலும் அழிக்கக் கூடிய சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைத்திருந்தது. அவர்கள் மீண்டும் வலுவாக வளரும் வண்ணம் நீங்கள் அவர்களை அப்படியே விட்டுவிட்டு திரும்ப வந்து விட்டீர்கள். ஆகவே இப்பொழுதும் வாய்ப்பு உள்ளது; திரும்பி செல்லுங்கள்; மதீனாவின் மீது தாக்குதல் நடத்தி முஸ்லிம்களின் வேரை வெட்டி விடுங்கள் என்று குறைஷியர்களில் சிலர் ஒருவர் மற்றவரை பழித்துரைத்துக் கொண்டிருந்தார்கள். இதற்கு எதிராக மற்றவர்கள் என்ன கூறினார்கள்? என்றால், உங்களுக்கு ஒரு வெற்றி கிடைத்துள்ளது. அதை போதுமானதாகக் கருதுங்கள்; திரும்பிச் சென்று விடுங்கள்; இந்தப் புகழையும் நீங்கள் இழந்து விடாதீர்கள். இந்த வெற்றி தோல்வியாக மாறி விட வேண்டாம். ஏனெனில், இப்பொழுது நீங்கள் திரும்பிச் சென்று மதீனாவின் மீது தாக்குதல் நடத்தினால் நிச்சயமாக முஸ்லிம்கள் உயிரைக் கொடுத்து சண்டையிடுவார்கள். உஹது போரில் கலந்து கொள்ளாதவர்களும் மைதானத்திற்குள் இறங்கி விடுவார்கள் என்று கூறினார்கள்.

இறுதியில் உணர்ச்சி பொங்க பேசிய மக்களுடைய கருத்து மிகைத்தது. மதீனாவை நோக்கி திரும்பி செல்வதற்கு குறைஷியர்கள் ஆயத்தமானார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவங்களைப் பற்றிய தகவல் கிடைத்த போது, முஸ்லிம்களே! ஆயத்தமாகுங்கள்! என்று அன்னார் (ஸல்) உடனடியாக அறிவிப்பு செய்தார்கள். அத்துடன் மற்றொரு கட்டளையும் வழங்கினார்கள். அதை நான் முன்பும் எடுத்துக் கூறியுள்ளேன். இதில் சில விஷயங்கள் அதிமாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே நான் மீண்டும் இதை எடுத்துக் கூறுகிறேன். உஹது போரில் கலந்து கொண்ட மக்களைத் தவிர வேறு எவரும் நம்முடன் வர வேண்டாம் என்று அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள். உஹது போரில் கலந்து கொண்ட போராளிகளில் பெரும்பாலான நபர்கள் காயமுற்றிருந்தார்கள். ஆகவே அவர்கள் தமது காயங்களுக்கு கட்டு போட்டு விட்டு தன் எஜமானருடன் இணைந்து கொண்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் எந்த அளவு மகிழ்ச்சியுடனும், உத்வேகத்துடனும் புறப்பட்டார்கள் என்றால், அதைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது, வெற்றி பெற்ற ஒரு படை வெற்றிக்குப் பிறகு எதிரியை விரட்டிச் செல்வதற்காக செல்வதைப் போன்று அவர்கள் புறப்பட்டார்கள். 8 மைல் தூர பயணத்தை கடந்த பிறகு ஹம்ரா அல்அஸத் என்ற இடத்தை சென்றடைந்த பிறகு இரு முஸ்லிம்களுடைய சடலங்கள் மைதானத்தில் காணக் கிடைத்தன. ஆராய்ந்த போது, குறைஷியர்களை பின்தொடர்ந்து செல்வதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த ஒற்றர்கள் ஆவர் என்பது தெரிய வந்தது. சந்தர்ப்பம் கிடைத்த உடன் குறைஷியர்கள் அவர்களை கொன்று விட்டார்கள்.அந்த ஷஹீதுகளுக்காக ஒரு கபரை தோண்டச் செய்து அதில் (அவ்விருவரையும்) சேர்த்து பெருமானார் (ஸல்) அவர்கள் அடக்கம் செய்தார்கள். அப்பொழுது மாலை நேரமாக ஆகியிருந்தது. அங்கேயே முகாமிடுமாறு அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள். மைதானத்தில் பல்வேறு இடங்களில் தீமூட்டுமாறு அன்னார் (ஸல்) கட்டளையிட்டார்கள்.

பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஹம்ரா அல் அஸத் மைதானத்தில் 500 நெருப்புகள் மூட்டப்பட்டு விட்டன. அவை தூரத்தில் இருந்து பார்க்கக் கூடிய ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அச்சத்தை ஏற்படுத்தின. அநேகமாக அந்த சந்தர்ப்பத்தில் தான் இணை வைப்பாளரும்,கஸாஆ என்ற கோத்திரத்தின் தலைவருமான முஅபத் என்ற பெயர் கொண்ட ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி உஹது

*திருக்குர்ஆனிலிருந்து...*

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

போரில் கொல்லப்பட்டவர்கள் குறித்து தனது அனுதாபத்தை வெளிப்படுத்தினார். பிறகு அவர் தம் வழியில் புறப்பட்டுச் சென்று விட்டார். இரண்டாவது நாளில் ரவ்ஹா என்ற இடத்தை அவர் அடைந்தபோது, அங்கு குறைஷிய படை முகாமிட்டிருப்பதைக் கண்டார். மதீனாவை நோக்கி திரும்பி செல்வதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. முஅபத் அவர்கள் உடனடியாக அபூஸுஃப்யான் அவர்களிடம் சென்று, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இப்பொழுதுதான் முஹம்மத் (ஸல்) அவர்களின் படையை ஹம்ரா அல் அஸத்-ல் பார்த்து விட்டு வருகிறேன். அதைப் போன்ற அச்சுறுத்தும் ஒரு படையை நான் கண்டதே கிடையாது. உஹது தோல்வியின் வெட்க உணர்வு அவர்களிடத்தில் எந்த அளவு உத்வேகம் கொண்டுள்ளது என்றால், உங்களை கண்ட உடனே அவர்கள் பொசுக்கி விடுவார்கள் என்று கூறினார். அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய தோழர்கள் மீது மஅபத் உடைய பேச்சுகள் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தின என்றால், மதீனாவின் பக்கம் திரும்பி வரக் கூடிய எண்ணத்தை கைவிட்டு விட்டு அவர்கள் உடனடியாக மக்காவை நோக்கி புறப்பட்டுச் சென்று விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு குறைஷியப் படை இவ்வாறு ஓடிச் சென்றதை பற்றிய தகவல் கிடைத்த போது அன்னார் (ஸல்) இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். இது இறைவன் ஏற்படுத்திய தாக்கமாகும்; அவன் நிராகரிப்பாளர்களுடைய உள்ளங்கள் மீது அதை ஆதிக்கம் செலுத்த விட்டு விட்டான் என்று கூறினார்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று, இதனுடைய விவரங்களை நான் முன்பும் கூறிவிட்டேன். இது அதனுடைய சுருக்கமாகும்.

அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டு மூன்று நாட்கள் ஹம்ரா அல் அஸத்-ல் தங்கியிருந்தார்கள். ஐந்து நாட்களுக்குப் பிறகு மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். இந்தப் போர் நடவடிக்கையில் குறைஷியர்களின் இரு வீரர்கள் முஸ்லிம்களால் சிறைபிடிக்கப்பட்டனர். அதில் ஒருவன் துரோகியும், மற்றொருவன் ஒற்றனும் ஆவான். போருடைய சட்டதிட்டங்களின் கீழ் அவர்களுக்கான தண்டனையாக மரணத் தண்டனை இருந்தது. எனவே பெருமானார் (ஸல்) அவர்களுடைய கட்டளையின் அடிப்படையில் அவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் ஒருவன் மக்காவினுடைய பிரசித்திப் பெற்ற கவிஞனான அபூ உஸ்ஸா என்பவன் பத்ர் போரில் முஸ்லிம்களால் கைது செய்யப்பட்டிருந்தான். பிறகு அவன் மன்னிப்பு கேட்டான்; இனிமேல் முஸ்லிம்களுக்கு எதிராக போரிடுவதற்காக வரமாட்டேன் என்று அவன் வாக்குறுதி கொடுத்தன் அடிப்படையில் பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வித மீட்புத் தொகையும் வாங்காமல் அவனை விட்டு விட்டார்கள். ஆனால், அவன் துரோகம் செய்தவாறு மீண்டும் முஸ்லிம்களுக்கு எதிராக போரில் கலந்து கொண்டான். அவன் கலந்து கொண்டது மட்டுமின்றி வெறுப்பை மூட்டுகின்ற தனது கவிதைகளால் மற்றவர்களையும் தூண்டி விட்டான். ஆகவே இவ்வாறான நபருடைய துரோகம் முஸ்லிம்களுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. எனவே அவன் மீண்டும் முஸ்லிம்களால் சிறைபிடிக்கப்பட்ட போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவனை கொலை செய்வதற்கு கட்டளையிட்டார்கள். அபூ உஸ்ஸா மீண்டும் முன்பை போல் மன்னிப்புக் கேட்டு விடுதலையை வேண்டினான். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள்

لَا يُلْدَغُ الْمُؤْمِنُ مِنْ جُحْرٍ وَاحِدٍ مَرَّتَيْنِ

என்று கூறினார்கள். அதாவது ஒரு நம்பிக்கையாளர் ஒரே பொந்தில் இரு முறை கடிபடமாட்டார்.

இரண்டாவது கைதி, முஆவியா பின் முகைரா என்பவன் ஆவான். இவன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் அவர்களுடைய உறவினர்களில் ஒருவனாக இருந்தான். ஆனால், இஸ்லாத்தின் கடுமையான எதிரியாவான். உஹது போருக்கு பிறகு அவன் மறையாக மதீனாவின் சுற்றுவட்டாரங்களில் சுற்றிக் கொண்டிருந்தான். ஆனால், ஸஹாபிகள் அவனை பார்த்து விட்டார்கள். அவனைப் பிடித்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் மூன்று நாட்களுக்குள் அங்கிருந்து அவன் புறப்பட்டு விட வேண்டும்; இல்லையென்றால் இந்த உளவுப் பணிக்காக கொல்லப்பட்டு விடுவான் என்று வாக்குறுதி வாங்கி அவனை விட்டு விட்டார்கள். அதாவது அவனுக்கு முதலில் எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குள் சென்று விடு; நீ இங்கு உளவுப் பணி மேற்கொண்டால் அதற்கான தண்டனை மரணத் தண்டனை ஆகும். சென்று விட்டால் நல்லது; இல்லை என்றால் தண்டனை கிடைக்கும் என்று கூறப்பட்டது. மூன்று நாட்களுக்குள் சென்று விடுவதாக முஆவியா வாக்குறுதி கொடுத்தான். ஆனால் அந்தக் காலகட்டம் கடந்து விட்டப் பிறகும் கூட அவன் மறைவாக அங்கு சுற்றிக் கொண்டிருந்தான். எனவே அவன் கொல்லப்பட்டு விட்டான். அவனுடைய எண்ணம் எதுவாக இருந்தது என்று வரலாற்றில் குறிப்பிடவில்லை. ஆனால் இவ்வாறு மறைவாக மதீனாவின் பகுதிகளில் வசிப்பது, எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பிறகும் கூட குறிப்பிட்ட காலக் கெடு கடந்த பிறகும் அங்கேயே தங்கியிருப்பது ஆகியவை அவன் ஏதேனும் அபாயகரமான நாட்டம் கொண்டு அங்கு தங்கி இருந்ததை வெளிப்படுத்துகின்றது. உஹது போரில் பெருமானார் (ஸல்) அவர்கள் தப்பி விட்டதைக் கண்டு அவன் கோபம் கொண்டு அன்னாருக்கு எதிராக ஏதேனும் தீய நாட்டம் கொண்டவனாக மதீனாவுக்குள் சென்றிருக்கலாம். யூதர்கள் அல்லது மதீனத்து முனாஃபிக்குகளுடைய சூழ்ச்சியின் மூலமாக ஏதேனும் மறைவாக தாக்குதல் நடத்த எண்ணி இருக்கலாம். இதில் வியப்பேதுமில்லை. ஆனால், இறைவன் பாதுகாத்தான்; அவனுடைய திட்டம் பலிக்கவில்லை.

உஹது போரின் முடிவை குறித்து நீண்ட விவாதங்கள் நடைபெற்றுள்ளன. சில வரலாற்று ஆசிரியர்கள் உஹது போரை தோல்வி என்று விளக்கம் கொடுத்துள்ளனர். அதாவது முஸ்லிம்களுக்கான தோல்வி என்று. சிலர் இதை வெற்றி என்று கூறுவதில் இருந்து பொதுவாக தவிர்ந்து கொள்கின்றனர்; இரண்டுக்கும் இடைப்பட்டதாக தமது கருத்தை வைக்கின்றனர். சிலர் எவ்வாறு உள்ளார்கள்? என்றால் ஒரு தோல்விக்கு பிறகு கிடைத்த வெற்றி என்று விளக்கம் கொடுக்கின்றனர். ஆனால் உண்மை நிலைமை என்னவென்றால், அந்தக் காலத்து போர் சட்டங்கள் மற்றும் மரபுகளை கொண்டு பார்க்கும் போது முஸ்லிம்களுக்கு உஹது களத்தில் தோல்வி ஏற்பட்டது என்று கூற முடியாது. ஏனெனில், எப்படிப்பட்ட தோல்வி? அல்லது காஃபிர்களுக்கு எப்படிப்பட்ட வெற்றி? அபூஸுஃப்யான் அவர்கள் வெறும் முழக்கங்களை இட்டவாறு தம் படையை அழைத்துக் கொண்டு உஹது மைதானத்தை விட்டு மக்காவை நோக்கி புறப்பட்டு சென்று கொண்டிருந்த நேரத்திலும் கூட முஸ்லிம்கள் போர்க் களத்தில்தான் நின்று கொண்டிருந்தார்கள். இன்றைய இந்த நாள் பத்ர் நாளுக்கான பழிவாங்கல் ஆகும் என்று அவர் வெற்று முழக்கங்களையும் கூறிக் கொண்டிருந்தார். ஏனெனில், இதுவும் அவருடைய வெற்று முழக்கமாக மட்டுமே இருந்தது. ஏனெனில், இது பத்ர் போருக்கான பழிவாங்கலாக எப்படி ஆகும்? பத்ர் போரில் காஃபிர்களுடைய தளபதிகள் உட்பட அவர்களின் பெரும் பெரும் தலைவர்களும் கொல்லப்பட்டு விட்டார்கள்; பத்ர் போரில் அவர்களின் 70 நபர்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்தார்கள் ; பத்ர் போரில் ஒரு பெரும் போர்ச் செல்வம் முஸ்லிம்களுக்கு கிடைத்திருந்தது ; பத்ர் போரில் முஸ்லிம்கள் வெற்றியாளர்களாக இருந்தார்கள். அவர்கள் மரபுகளுக்கு ஏற்ப மூன்று நாட்கள் அங்கு தங்கி இருந்தார்கள். காஃபிர்களின் படை அங்கிருந்து ஓடிவிட்டது. ஆனால், உஹது நாளில் இவற்றில் எந்த ஒரு விஷயமும் காஃபிர்களுக்கு கிடைக்கவில்லை. ஆகவே இது பத்ருடைய பழிவாங்கலாக எவ்வாறு ஆக முடியும்? ஆகவே உஹது நாளிலும் முஸ்லிம்களுக்கு நிச்சயமாக தோல்வி கிடைக்கவில்லை. ஆனால் முதல் நிலையில் ஒரு தெளிவான வெற்றிக்குப் பிறகு இரண்டாவது நிலையில் முஸ்லிம்களுக்கு கடும் உயிர்சேதம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், இறுதியில் முஸ்லிம்கள் உஹது களத்தில் நிலை கொண்டு விட்டார்கள்; அங்குதான் இருந்தார்கள். மேலும் மக்கத்து காஃபிர்களுக்கு முழுமையான வெற்றி கிடைப்பதில் இருந்து மறைவான ஆதரவு தம் வலுவான ஆற்றல்களைக் கொண்டு தடுத்திருந்தது. ஒரு தற்காலிகமான வெற்றிக் கிடைத்தப் பிறகும் கூட அவர்கள் முஸ்லிம்களுக்கு மேற்கொண்டு நஷ்டத்தை ஏற்படுத்த இயலாமல் இருந்தனர். அக்கால போர் வழக்கத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, (காஃபிர்கள்) குறிக்கோளை அடையாமல் உஹது போர்க்களத்தை விட்டு திரும்பி சென்று விட்டார்கள். அடுத்த நாளே ஹம்ரா அல் அஸத்-ஐ நோக்கி முஸ்லிம்கள் முன்னேறி சென்றதை இத்துடன் இணைத்துப் பார்க்கும் போது உஹது போர் பிரகாசமான முறையிலும், தெளிவான முறையிலும் வெற்றியாக தென்படுகின்றது. ஆனால் உஹது போர்க்களத்தில் சிதறிச் சென்று நஷ்டம் ஏற்பட்டது கூட முஸ்லிம்களுக்கும், பிறகு வந்த காலத்திற்கும் பல நுட்பங்கள் உருவாக காரணியாக அமைந்து விட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நிரந்தரமான விளைவின் அடிப்படையில் பார்க்கும் போது, உஹது போருக்கு

எந்தவொரு குறிப்பிட்ட முக்கியத்துவமும் கிடையாது. பத்ர் போருக்கு முன்னால் இந்த போருக்கு எவ்வித முக்கியத்துவமும் கிடையாது. ஏனெனில் தற்காலிகமான முறையில் இந்தப் போர் நிச்சயமாக முஸ்லிம்களுக்கு சிலவகையில் பாதிப்பை ஏற்படுத்தியது உண்மைதான். முதலாவதாக, முஸ்லிம்களுடைய 70 நபர்கள் இந்தப் போரில் ஷஹீதாகிவிட்டார்கள்; அவர்களுள் சிலர் பெரும் ஸஹாபிகளும் ஆவர். காயமுற்றவர்களின் எண்ணிக்கையோ அதிகமாக இருந்தது. இரண்டாவது விஷயம், மதீனாவின் யூதர்களும், நயவஞ்சகர்களும் பத்ர் போரின் விளைவாக கொஞ்சம் கலக்கமடைந்து போயிருந்தனர். தற்போது அவர்களுக்கு கொஞ்சம் துணிவு பிறந்து விட்டிருந்தது. இன்னும் கூறுவதென்றால், அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவனுடைய தோழர்களோ மிகவும் வெளிப்படையாக கேலி கிண்டல் செய்தனர்; பழித்துப் பேச ஆரம்பித்தனர். மூன்றாவது விஷயம், மக்கத்து குறைஷியர்களுக்கு மிகவும் துணிவு ஏற்பட்டு விட்டது. தாம் பத்ர் போருக்காக பழிக்குப்பழி வாங்கியது மட்டுமின்றி, இனிமேலும் படையை திரட்டி கொண்டு தாக்குதல் தொடுத்தால் முஸ்லிம்களை அடிபணிய வைத்துவிடலாம் என்று கூட அவர்கள் தம் உள்ளத்தில் புரிந்து வைத்திருந்தனர். நான்காவது, அரேபிய கோத்திரங்களும் கூட பொதுவாக உஹது போருக்கு பிறகு அதிகமாக தலை தூக்க ஆரம்பித்தன. ஆனால், இந்த நஷ்டங்கள் இருந்தபோதிலும் ஒரு தெளிவான உண்மையை மறுக்க முடியாது. அது என்னவென்றால், பத்ர் போர் குறைஷியர்களுக்கு எந்த அளவு நஷ்டத்தை ஏற்படுத்தியதோ அதை உஹது போரின் வெற்றியும், அதனால் ஏற்பட்ட நஷ்டமும் ஈடுகட்ட முடியாது. உண்மையான முறையில் குறைஷிய சமுதாயத்தினுடைய வாழ்வின் ஆன்மாவாக இருந்த மக்காவின் அனைத்து தலைவர்களும் பத்ர் போரில் கொல்லப்பட்டனர். திருக்குர்ஆன் எடுத்துக் கூறியது போன்று, உண்மையான பொருளில் அந்த சமுதாயத்தின் வேர் வெட்டப்பட்டு விட்டிருந்தது.

இந்த அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தின் கைகளால் நிகழ்ந்தது என்றால், அவர்கள் வெளிப்படையான காரணிகளின் அடிப்படையில் பார்க்கும்போது காஃபிர்களுக்கு எதிராக முற்றிலும் அற்பமானவர்களாக இருந்தனர். சந்தேகத்திற்கிடமின்றி இதற்கு எதிரே முஸ்லிம்களுக்கு உஹது போர்க் களத்தில் நஷ்டம் ஏற்பட்டதும் உண்மைதான். ஆனால் பத்ர் போரில் குறைஷியர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் காட்டிலும் இது முற்றிலும் அற்பமானதும், தற்காலிகமானதுமாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய சமூகத்தினுடைய மையப் புள்ளியாக இருந்தார்கள்; குறைஷியர்களின் விரோத நடவடிக்கைகளுக்கான அசல் இலக்காக இருந்தார்கள் ; ஆனால், அன்னார் (ஸல்) உயிருடன் இருந்தார்கள். அதுமட்டுமின்றி, பெரும் ஸஹாபிகளில் ஓரிருவரைத் தவிர அனைவரும் நலமுடன் இருந்தார்கள். முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நஷ்டமும் கூட எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அவர்களை விட எண்ணிக்கையில் பல மடங்கு அதிகமாகவும், போர்த் தளவாடங்களைப் பொருத்த வரை பல மடங்கு வலிமையான தளவாடங்களைக் கொண்டிருந்த படைக்கு எதிராக அவர்களுக்கு அந்த நஷ்டம் ஏற்பட்டிருந்தது. எனவே முஸ்லிம்களுக்கு பத்ருடைய மகத்துவமிக்க வெற்றிக்கு எதிரில் உஹதுடைய பாதிப்பு ஒரு சாதாரண விஷயமாக இருந்தது. இந்த பாதிப்பும் கூட முஸ்லிம்களுக்கு ஒருவகையில் மிகவும் பயனை கொடுத்தது. ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கும், வழிகாட்டலுக்கும் எதிராக நடப்பது ஒருபோதும் வெற்றியையும், நன்மையையும் தராது என்பது முஸ்லிம்களுக்கு தெள்ளத்தெளிவாக தெரிந்து விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருக்கலாம் என்று ஆலோசனை கொடுத்து அதற்கு ஆதரவாக தமது ஒரு கனவையும் எடுத்துக் கூறினார்கள். ஆனால், வெளியே சென்று போரிட வேண்டும் என்று மக்கள் பிடிவாதம் செய்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களை உஹதுடைய ஒரு குன்றின் மீது நியமித்திருந்தார்கள். என்ன நிகழ்ந்தாலும் சரி; இந்த இடத்தை விட்டு விடக் கூடாது என்று மிகவும் வலியுறுத்தி கூறியிருந்தார்கள். ஆனால், அவர்கள் போதும் என்று கருதி அந்த இடத்தை விட்டு விட்டு கீழே இறங்கி விட்டார்கள். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட ஒரு சாரார் சார்பாக செயல் பலவீனம் வெளிப்பட்ட போதிலும் - மனிதனுடைய வாழ்வியல் முறை அனைவரையும் ஒரே சரடில் இணைத்து வைத்திருப்பதால் - இந்த பலவீனத்தின் விளைவால் அனைவரும் நஷ்டத்தை அனுபவிக்க வேண்டியது ஏற்பட்டது. ஏனெனில், ஏதேனும் லாபம் கிடைக்கும்போது அதை அனைவரும் அனுபவிப்பது போன்று; ஆக, இதுவும் ஓர் அடிப்படை விஷயமாகும். சிலசமயம் சில மக்களின் பலவீனங்களால் முழு சமூகமும் நஷ்டத்தை அனுபவிக்கின்றது. அதேபோன்று பயன் கிடைக்கும் போது முழு சமூகத்திலும் ஒரு நல்ல தாக்கம் நிலைபெற்று விடுகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஆதரவாக பலபேர் பேசுவதை உலகில் இன்று நாம் பார்க்கின்றோம். 100 சதவிகித அஹ்மதிகள் உயர்தரத்தில் இல்லைதான். ஆயினும் சில மக்களுடைய நல்ல தாக்கத்தின் காரணமாக மீதமுள்ளவர்களும் நல்ல தரமான நபர்கள் ஆவர் என்று மக்கள் நினைக்கின்றனர்.

ஆகவே உஹது போரின் நஷ்டம் ஒருவிதத்தில் துன்பமாக இருந்தது என்றால், மற்றொரு விதத்தில் அது முஸ்லிம்களுக்கு ஒரு நல்ல படிப்பினையை தரக் கூடியதாக ஆகியிருந்தது. துன்பத்தை பொருத்த வரையிலும் கூட அது முஸ்லிம்கள் வழியில் ஒரு தற்காலிக தடையாக மட்டுமே இருந்தது. அதற்குப் பிறகு முஸ்லிம்களின் எவ்வாறான மாபெரும் வெள்ளத்தைப் போன்று ஆகிவிட்டார்கள் என்றால் அது சில இடங்களில் நின்றுவிடுவதாலும், தடுமாறி விடுவதாலும் (இன்னும்) வேகமெடுத்து மிக விரைவாக தமது குறிக்கோளை நோக்கி முன்னேறுகின்றவர்களாக ஆகி இருந்தார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஒரு சொற்பொழிவில் உஹது போருக்கு பிறகு நிகழ்ந்த சம்பவங்களை ஆய்வு செய்தவாறு அதனுடைய சில அம்சங்களை எடுத்துக் கூறினார்கள் ; நம்பர் ஒன்று, எவ்வித தாமதமும் இன்றி மீண்டும் புதிய வகையில், போருக்காக செல்லுமாறு கூறி கொலை செய்யப்படும் களத்திற்கு அழைத்துச் செல்வது என்பது எப்படிப்பட்ட விஷயம் என்றால், முஸ்லிம்களிடத்தில் இருந்து தோல்வியின் உணர்வை முற்றிலும் துடைத்தெறிவதற்கு இதை விட மிகச் சிறந்த நடவடிக்கை சாத்தியம் இல்லாததாக இருந்தது. நம்பர் இரண்டு, புத்துணர்ச்சி கொண்ட இளைஞர்களையும் புதிய போராளிகளையும் அழைத்து செல்வதற்கு பெருமானார் (ஸல்) அனுமதி வழங்காமல் இருந்தது, அன்னார் (ஸல்) வெளிப்படையான காரணிகள் மீது நம்பிக்கை வைக்கக் கூடியவர்களாக இருக்கவில்லை ; மாறாக, தமது உண்மையான நம்பிக்கை தமது இறைவனே ஆவான் ; அவன் நிச்சயமாக தமக்கு உதவி செய்வதற்கு ஆற்றல் கொண்டவனாக இருக்கின்றான் என்று அன்னார் (ஸல்) வாதித்தது மற்றும் அதன் மீது அன்னாருக்கு இருந்த நம்பிக்கையில் அன்னார் (ஸல்) உண்மையாளராக இருந்தார்கள் என்பதை நிரூபிக்கின்றது. நம்பர் மூன்று, எந்த ஸஹாபிகளின் பாதங்கள் உஹது போர்க் களத்தில் தடுமாறி விட்டனவோ அவர்கள் மீது அன்னார் (ஸல்) முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். அந்த ஸஹாபிகள் புறமுதுகு காட்டக் கூடியவர்கள் கிடையாது; மாறாக திடீரென்று ஏற்பட்ட தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் கட்டாயத்திற்குள்ளாகி போனார்கள் என்று அன்னார் (ஸல்) நம்பினார்கள். இவ்வாறு முடிவெடுத்ததன் மூலமாக பெருமானார் (ஸல்) அவர்கள் தம் ஸஹாபிகளுக்கு ஊக்கமளித்தார்கள். ஒரு படைத் தளபதிக்கு அருகில் சில தியாகிகளைத் தவிர வேறும் யாரும் இல்லாத அளவுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு அவருடைய படை தன்னந்தனியாக போர்க் களத்தில் விட்டு விட்டு ஓடிச் சென்று விடும் போது அந்த தளபதி தம் படையின் மீது இந்த அளவு முழுமையான நம்பிக்கையை வெளிப்படுத்தியதாக மனித போர் வரலாற்றில் இது போன்ற எந்த ஒரு முன்மாதிரியையும் நாம் காண இயலாது. நம்பர் நான்கு, பெருமானார் (ஸல்) அவர்களின் நம்பிக்கை 100 சதவிகிதம் சரியானதாக இருந்தது. அது எந்தவோர் உணர்ச்சிக்கும் உட்பட்டு எடுத்த முடிவாக இருக்கவில்லை என்பதை பின்வரும் விஷயம் நிரூபிக்கின்றது. ஏனெனில், உஹது போரில் கலந்து கொண்ட போராளிகளிடத்தில் நடமாட கூட ஆற்றல் இல்லாமல் இருந்த போதிலும் அவர்கள் எவ்வித தாமதமுமின்றி முழு திடத்துடனும், உத்வேகத்துடனும் மிகவும் அபாயகரமான இந்த போர் திட்ட நடவடிக்கையில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். இந்த போர் நடவடிக்கை தற்கொலைக்கு ஒப்பானது என்று கூறி எந்த ஒரு நபரும் முகம் திருப்பவில்லை. ஒருமுறை கஷ்டப்பட்டு உயிர் தப்பிய பிறகு மீண்டும் அந்த வலிமையான, கொடுங்கோல் எதிரியின் காட்டுக்குள் சென்று தாமே சிக்கிக் கொள்வது எந்த விதமான புத்திசாலித்தனம்? என்று எவரும் ஆட்சேபனை செய்யவில்லை.

ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 06 June 2024 Issue No.23

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(ஸல்) அவர்கள் உஹது போருக்கு அடுத்த நாளன்றே எதிரியை பின்தொடர்ந்து செல்ல வேண்டும் என முடிவெடுத்தது அன்னார் (ஸல்) தம் தோழர்கள் மீது செய்த மாபெரும் பேருபகாரமாகும். ஏனெனில், அவர்களுடைய காயமடைந்த பங்களிப்பை ஒரே நொடியில் முழுமையான முறையில் குணமாக்கியது போன்று எந்தவொரு தளபதியும் ஒருபோதும் தன் படையின் மீது இவ்வாறான உபகாரம் செய்ததில்லை. اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ وَ بَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

நம்பர் ஐந்து, பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டது வெறும் உணர்ச்சிக்கு உட்பட்டு செய்யப்பட்டது கிடையாது. மாறாக போர் நுட்பத்தின் அடிப்படையில் பார்க்கும் போது அது மிகவும் பயன்தரக் கூடியதாக நிரூபணமானது. அதன் காரணமாக எதிரி இன்னொரு வலுவான தாக்குதல் நடத்துவதில் இருந்து விலகிக் கொண்டான். எந்த அளவுக்கு என்றால், வெற்றியின் முழக்கத்தோடு அவன் திரும்பாமல் மிகவும் அச்சத்திற்குள்ளாகி திரும்பினான். மேலும் கூடுதலாக எவ்வித பாதிப்புமின்றி பெருமானார் (ஸல்) அவர்கள் தமது ஞானம் மற்றும் திட்டத்தின் அருளால் பல மாபெரும் பயன்களை அடைந்தார்கள்.

அன்னார் (ரலி) எழுதுகிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களுடைய போர்களையெல்லாம் பார்க்கும்போதெல்லாம் அன்னாருடைய அழகிய நிகரற்ற ஆற்றல்களின் மீதும் வியத்தகு ஒளி விழுகிறது. படைத் தளபதி என்ற விதத்தில் அவை அன்னாரிடத்தில் முழுமையாக இருந்தன. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் ஆரம்பமும், இறுதியும் ஒரு புலமைப் பெற்ற படைத் தளபதி என்ற வகையில் உள்ளது. மாறாக ஒழுக்க ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும் ஒரு தலைவர் என்ற ரீதியில் அன்னார் (ஸல்) இருக்கின்றார்கள். அன்னாருடைய கைகளில் அழகிய நல்லொழுக்கங்கள் எனும் கொடி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது மிக முக்கிய விஷயமாகும்.

உயரிய நல்லொழுக்கத்தின் கொடியை உயர்த்திப் பிடித்தவாறு அதை மேலோங்கச் செய்த பிறகு அன்னார் (ஸல்) எப்படிப்பட்ட மாபெரும் போராட்டத்தில் மூழ்கி விட்டார்கள் என்றால் அது தொடரக் கூடிய ஒருபோதும் முடிவடையாத போராட்டமாக இருந்தது. போர் சூழ்நிலையில் எவ்வாறு அது தொடர்ந்து கொண்டிருந்ததோ அவ்வாறே அமைதியான சூழ்நிலையிலும் அது தொடர்ந்து கொண்டிருந்தது. பகலிலும் அன்னார் (ஸல்) இந்தக் கொடியை பாதுகாத்தார்கள்; இரவிலும் பாதுகாத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கும், அன்னாருடைய தோழர்களுக்கும் கடுமையான உடல் துன்பங்களையும் வேதனை மிகுந்த காயங்களையும் கொடுப்பதில் எதிரி எத்தனையோ முறை வெற்றி பெற்றிருக்கின்றான். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களுடைய நல்லொழுக்கம் எனும் இந்தக் கொடிக்கு எந்த ஒரு களங்கமும் ஏற்படவில்லை ; அதற்கு எந்த ஒரு நஷ்டமும் ஏற்பட விடவில்லை. இவை அனைத்தும் நிகழ்ந்தபோதிலும் அன்னாருடைய உயரிய நல்லொழுக்கம் எப்பொழுதும் வெளிப்படக் கூடியதாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களுடைய உடல் கடுமையான காயங்களால் துன்பப்பட்டு உஹதுடைய பாறை நிலத்தில் விழுந்த போதும் இந்தக் கொடி அன்னாருடைய தூய கரங்களில் மிக மகத்துவத்தோடு விண்ணின் உயரங்களுக்கு இணையாக பறந்து கொண்டிருந்தது. நாலாபுறமும் ஸஹாபிகளுடைய உடல்கள் வெட்டுண்டு விழுந்து கொண்டிருந்தபோதிலும் இந்தக் கொடி ஒரு வியத்தகு தன்னிறைவுத் தன்மையுடன் அன்னாருடைய கரங்களில் பறந்து கொண்டிருந்தது.

எனவே முஹம்மது (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்கள் எனும் ஜிஹாதும், அன்னாரது தோழர்களுடைய நல்லொழுக்கங்கள் எனும் ஜிஹாதும் உஹது போர்க்களத்தில் மிக வலிமையுடனும், ஆற்றலுடனும் தொடர்ந்து கொண்டிருந்தன. மாபெரும் வெற்றி வீரராகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நல்லொழுக்கம் எனும் போர்க்களத்திலும் மாபெரும் வெற்றிக் கிடைத்துக் கொண்டிருந்தது. நல்லொழுக்கம் எனும் மிக உறுதியான கட்டடங்களையும் தரைமட்டமாக்கி விடக் கூடிய ஆற்றல் கொண்ட அபாயகரமான நிலநடுக்கங்களுக்கிடையில் அன்னார் (ஸல்) நலமுடன் வெளியேறி வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உஹது போரில் வெளிப்படையான முறையில் வெற்றிக்குப் பிறகு தோல்வியின் ஓர் அம்சம் உருவாகி விட்டது. ஆனால், இந்தப் போர் உண்மையில் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைக்கு ஒரு மாபெரும் அடையாளமாக இருந்தது. இந்தப் போரில் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப முஸ்லிம்களுக்கு முதலில் வெற்றி கிடைத்தது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப அன்னாருடைய அன்பிற்குரிய தந்தையின் சகோதரர் போரில் கொல்லப்பட்டார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப ஆரம்ப தாக்குதலில் காஃபிர்களுடைய படையின் கொடியை பிடித்தவர் கொல்லப்பட்டார். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப அன்னாரும் காயமடைந்து போனார்கள்; பல ஸஹாபிகளும் ஷஹீதாகிப் போனார்கள். அது மட்டுமின்றி முஸ்லிம்களுக்கு எவ்வாறான களங்கமற்றத் தன்மையையும், ஈமானையும் வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது என்றால், அது போன்ற உதாரணத்தை வரலாற்றில் எங்குமே காண முடியாது.

உஹது போர் மிகப் பெரும் வெற்றியைக் கொண்ட போராக இருந்தது என்பதைக் குறித்தும், அந்தப் போருக்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தஃலீம் மற்றும் தர்பியத்துடைய பணியை மீண்டும் எவ்வாறு துவங்கினார்கள் என்பதைக் குறித்தும் விவரித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்தப் போரில் பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருந்தார்கள்; பலர் காயமடைந்தும் இருந்தார்கள். ஆனால், அவ்வாறிருந்தும், உஹது போர் தோல்வியை கொடுத்த போர் என்று கூற முடியாது. அது ஒரு மிகப் பெரும் வெற்றியை கொடுத்தப் போராக இருந்தது. எப்படிப்பட்ட வெற்றி என்றால், கியாமத் வரையில் முஸ்லிம்கள் அதை நினைவுகூர்ந்து தங்களது ஈமானை அதிகரித்துக் கொள்ள முடியும்; அதிகரித்துக் கொண்டே இருக்க முடியும். மதீனா வந்தடைந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் தமது அசல் பணியை ஆரம்பித்தார்கள். அதாவது, தர்பிய்யத் மற்றும் தஃலீம் ஆகியவற்றின் பணி. ஆனால் இந்த பணியை வசதியாகவும், எளிதாகவும் அன்னாரால் செய்ய முடியவில்லை. உஹது சம்பவத்திற்கு பிறகு யூதர்களிடத்தில் இன்னும் தைரியம் உருவாகி இருந்தது. நயவஞ்சகர்கள் இன்னும் தலைதூக்க ஆரம்பித்து விட்டனர். இஸ்லாத்தை அழிப்பது மனித சக்திக்கு உட்பட்ட விஷயம் என்று ஒருவேளை அவர்கள் நினைத்துக் கொண்டனர். ஆகவே யூதர்கள் அன்னாருக்கு இவ்வாறு துன்பங்களை கொடுக்க ஆரம்பித்தனர். அசுத்தமான கவிதைகளை எழுதுவார்கள். அதில் அன்னாரையும், அன்னாரது குடும்பத்தையும் அவமரியாதை செய்தனர். ஒருமுறை

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்....

**National Watch Company**

**Sales & Service**




**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

**Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad**